முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 21—9—56 | வெள்ளி | ஒலி 24

கொலையுண்ட கொள்கை வீரன்
எங்கள் சாமி!

கீர்த்தி பெற்ற கீரைப்பாத்தி நாடுகள்!

"ஒரு நாடு தான் பெரிய நாடாக இருந்தால் உலகில் மதிப்புடன் வாழ முடியும். 'இந்தியா ஒரு பெரிய நாடு; 36 கோடி மக்கள் வாழும் நாடு' என்பதால்தான் இன்று உலகில் முக்கிய அங்கம் வகிக்கிறது. பொருளாதார ரீதியாக கவனித்தால்கூட ஒரு பெரிய நாட்டுக்குத்தான் மற்ற நாடுகள் சுலபமாக உதவி செய்யும். பெரிய பணக்காரன் கடன் வாங்குவது சுலபமல்லவா? ஒரு பெரிய நாட்டைத் தாக்க எந்த நாடும் அச்சப்படும். ரஷ்யா பெரிய நாடாக இருப்பதால்தான் சிறந்த வல்லரசாகத் திகழ்கிறது. ரஷ்யாவிலும் பல ஸ்தான்கள் பிரிய மார்க்கமுண்டு. ஆயினும் ரஷ்ய மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். மாறாகத் தனித்தனி ஸ்தான்களாகப் பிரிந்திருந்தால் இத்தனை நாளும் ஜெர்மானியர்களுக்கு அடிமையாகப் போயிருப்பார்கள். உலகச் சரித்திரமே வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும். ரஷ்ய மக்கள் ஐக்கியமாகக் கூட்டாட்சி நடத்தி பெரிய நாடாகத் திகழ்வதனால்தான் ஐரோப்பியர்கள் அதனிடம் வாலாட்ட முடியவில்லை. சிறுசிறு நாடுகளுக்கு என்றும் "நித்திய கண்டம் பூரண ஆயுசுதான்!" அதனால் திராவிடஸ்தான் என்னும் சிறு நாடு கேட்பதில் என்ன லாபமிருக்க முடியும்?

இந்த உப கண்டத்தின் வட கோடியில் 56 ஆயிரம் சதுர மைல்களே பரப்புள்ளதும், சுமார் 55 லட்சமே மக்கட் தொகை கொண்டதுமான நேப்பாளம் சுதந்தர நாடாக இருக்கிறது.

கிழக் கோடியிலே 254 லட்சம் சதுர மைல்களே கொண்டதும், சுமார் 180 லட்சமே மக்கட் தொகை உடையதுமான பர்மா விடுதலை கீதம் முழங்கியபடி இருக்கிறது.

மேல் கோடியிலோ பாகிஸ்தான்; சின்னஞ் சிறிய நாடு!

தென் கோடியிலோ 25 ஆயிரம் மைல்களே பரப்புடையதும், 62 லட்சம் மக்கட் தொகை கொண்டதுமான இலங்கைச் சுதந்தரச் சங்கம் முழங்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு நான்கு பக்கங்களிலும் சின்னஞ் சிறு சுதந்திர நாடுகளை வைத்துக் கொண்டு சிறு நாடுகள் வாழ முடியாது என்று ஒப்பாரி வைப்போரைப் பார்க்கும்போது, அவர்களுடைய கருத்துக் குழப்பத்தை நினைத்து ஒரு ஏளனச் சிரிப்பைத்தான் சிந்த வேண்டியிருக்கிறது.

"இந்தியா ஒரு பெரிய நாடு; 36 கோடி மக்கள் வாழும்நாடு என்பதால்தான் இன்று உலகில் முக்கிய அங்கம் வகிக்கிற" தாம்–பாவம்; இது நாள்வரை ஒரு பண்டித நேருவால்தான் பாரதத்தின் பெருமை அகில உலகத்திற்கும், அதள சுதல பாதாளத்திற்கும் தெரிகிறது என்று தம்பட்டம் அடித்தவர்கள், இன்றோ 36 கோடி மக்கள் வாழும் நாடு என்பதற்காகத்தான் இந்தியாவுக்கு மதிப்பு என சிறிதும் வெட்கமின்றி ஒத்துக் கொள்கிறார்கள்!

பண்டித நேருவால் இந்தியா பெருமையடையவில்லையாம்; பஞ்ச சிலமென்னும் சமாதான 'பஸ்ப'த்தால் பாரதம் கீர்த்தி பெறவில்லையாம்; இந்தியா ஒரு பெரிய நாடு என்பதற்காகத்தான் அதற்குப் பெருமையும் மகிமையுமாம்!

பரவாயில்லை; பண்டிதருக்கும், பஞ்ச சிலத்திற்கும் தந்து வந்த மதிப்பை இப்போது 36 கோடி மக்கட் தொகைக்குத் தந்திருக்கிறார்களே; அதுவரை மகிழ்ச்சிதான் நமக்கு!

பெரியநாடுதான் மதிப்புடனும், பலத்துடனும் வாழ முடியுமென்கிறார் இந்த திராவிடஸ்தான் எதிரி!

சிறிய நாடுகள், அவருடைய வாதப்படி, மதிப்புடனும் பலத்துடனும் வாழ முடியாதாம்!

அவர் குறிப்பிடும் இலக்கணப்படி இந்தியா பெரியநாடு; 36 கோடி ஜனத்தொகை கொண்டது!

ஆனால், போர்ச்சுக்கலோ சிறிய நாடு; கேவலம் 'கீரைப் பாத்தி நாடு!'

அதன் பரப்பளவோ வெறும் 34,500 சதுர மைல்கள்தான்!

ஜனத்தொகை இன்னும் சிறியஎண்!—80 லட்சம் பேர்தான் அங்கே வாழ்கிறார்கள்!

மக்கட் தொகையையும் பரப்பளவையும் வைத்துக் கணக்கிட்டால் இந்தியா ஒரு இமயம்; போர்ச்சுக்கல் ஒரு எறும்பு!

இந்தியா ஒரு சிங்க ஏறு; போர்ச்சுக்கல் ஒரு செம்மறியாடு!

ஆனால் நிலைமை என்ன? எறும்பு ஊர்ந்து ஊர்ந்து, இந்தியா என்கிற இமயத்தின் மதிப்பளவே குறைந்து விடும் போலிருக்கிறது. செம்மறியாடு மோதி மோதி, சிங்கத்தின் கபால ஓடுகளே நொறுங்கி விடும் போலிருக்கிறது!

எவ்வளவோ செய்து பார்த்தார், பண்டிதர்! கோவாவை விட்டு போர்ச்சுகீசியரை சுலபத்தில் வெளியேற்றிட முடியவில்லை.

'ஒரு பெரிய நாட்டைத் தாக்க எந்த நாடும் அச்சப்படும்' என்கிறாரே 'போட்டி'யின் பஞ்சாயத்தார்; அவர் கூறட்டும், இந்தியா போர்ச்சுக்கல் விஷயத்தில் எப்படி நடந்து வருகிறது?

போர்ச்சுக்கல் ஊசி முனை போன்ற நாடு தானே—என்று 36 கோடி ஜனத் தொகை கொண்ட இந்தியா தன் படையை ஏவ முடிந்ததா கோவா மீது?

முடியவில்லை; துள்ளித் திரிந்து கொண்டிருக்கும் சலாசர் என்னும் சிறிய மாட்டிற்கு மூக்கணாங்கயிறு மாட்ட முடியவில்லை, பெரிய நாட்டின் பிரதமராம், பண்டித நேருவினால்!

காரணம் என்ன?

சிறிய நாடு என்பதனால் பக்கத்திலேயுள்ள பெரிய நாடுகள் அவைகளைத் தின்று ஏப்பமிட்டு விட முடியாத அளவுக்கு இன்று சர்வதேச நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு விட்டது! அதனால்தான் சர்வாதிகாரி சலாசரைத் துரத்துவதற்குக் கூட ஏதேனும் சமாதான ஆயுதங்கள் கிடைக்கின்றனவா—என்று ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாகிய நாமும் துருவித் துருவி ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

'சிறுசிறு நாடுகளுக்கு என்றும் நித்தியகண்டம் பூரண ஆயுசாம்!'—கூறுகிறார் இவர்!

ஆனால் நித்திய கண்டம் என்பதற்காக எந்த நாடு தன்னுடைய சுதந்திரத்தை விலைகூற முன் வந்தது?

லக்ஸம்பர்க்—இதுவும் ஒரு சிறிய நாடுதான்! பரப்பளவு வெறும் 999 சதுரமைல். ஜனத்தொகையோ சுமார் இரண்டரை லட்சம்!

இங்குள்ள சில திராவிடஸ்தான் எதிரிகளைப் போலவே லக்ஸம்பர்க்குக்கும் எதிரிகள் இருந்தனர்!

1919–ம் ஆண்டில் கூடிய சமாதான மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க நிபுணர்கள் அனைவரும் "உண்மையான சுதந்திரம் கொண்ட லக்ஸம்பர்க் உருவாவது என்பது பொருளாதார ரீதியாக, இராணுவ ரீதியாக முடியாத காரியமாகும்," *என ஒரு முகமாகத் தீர்ப்புக் கூறினர்.*

இரண்டரை லட்சம் மக்கள்; ஆயிரத்திற்கு ஒரு மைல் குறைவான பரப்பளவு — இந்தக் 'கீரைப் பாத்தி நாட்'டிற்கா சுதந்திரம்? — என்று கர்ஜனை புரிந்தனர்.

பின்பு அதே ஆண்டில், அறிஞர் அண்ணா அடிக்கடி குறிப்பிடுவது போன்ற தேர்தல் (ரெபரண்டம்) நடைபெற்றது.

பொதுமக்களில் 80 சத வீதத்தினர் லக்ஸம்பர்க் சுதந்திர நாடாக வாழவேண்டும் என்று ஓட்டளித்தனர்.

பொருளாதார ரீதியாக' ராணுவ ரீதியாக சின்னஞ் சிறிய லக்ஸம்பர்க் தனித்து வாழ முடியாது என்று கூறிய அமெரிக்க நிபுணர்கள் அனைவரும் வெட்கித் தலை குனியும் வகையில் லக்ஸம்பர்க் இன்று சுதந்திரமாக வாழ்கிறது!

முன்பு பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற திட்டுகளில் இருந்ததைப் போல, லக்ஸம்பர்க்கும் 1921–ம் ஆண்டில் பெல்ஜியத்துடன் நாணயச் செலாவணி, ரயில்வே வசதிகள் போன்ற விஷயங்களில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு, தன்னுடைய சுதந்திரத்தைப் பறிகொடுக்காமல் வாழ்கிறது. 1920–ம்

(தொடர்ச்சி 8–ம்பக்கம்)

ஏன் வேண்டும் இனபத் திராவிடம்?



சென்னை 21--9--56 வெள்ளி

ஓட்டைப் படகு!

காட்டானையிடம் கரும்புத் தோட்டத்தை ஒப்படைத்ததைப் போல்—

கள்வர் தலைவனிடம் கஜானாவின் காவல் உத்யோகம் தந்ததைப் போல்—

இந்த உபசண்டத்து மக்களிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டார்கள், காங்கிரஸ் கட்சியினர்!

பொறுப்பற்ற தன்மை—

ஊழல்—

லஞ்சம்—

தாமதம்—

கவனக் குறைவு—

— இவை உலகிலே வேறெந்த அரசினிடமும் இருக்க முடியாத அளவுக்கு இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மலிந்துவிட்டது.

மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து அரசாங்கத்துக்கு வரி செலுத்துகிறார்கள், மக்கள்!

ஆனால் அந்த வரிப்பணமோ தரங்கெட்டவர்களின் நிர்வாகத்தில் கேவலம், மண்ணாங்கட்டியிலும் கீழாக்கப்பட்டு செலவிடப் படுகிறது.

அவ்வப்போது வெளியாகும் தணிக்கைக் குழுவின் அறிக்கைகளின் ஒவ்வொரு அணுவும் பரூக் மன்னனின் பண்புகெட்ட செயல்களுக்குப் பயன்பட்டதைப்போல பணம் வீணுக்கும், விழலுக்கும் வாரியிறைக்கப்பட்டிருப்பதைத்தான் சுட்டிக் காட்டுவனவாய் இருக்கின்றன.

இந்த முறை தணிக்கைக் குழு மத்திய அரசின் பாதுகாப்பு இலாக்கா எப்படி பொதுமக்களின் வரிப்பணத்துக்குப் பாதுகாப்புதர மறந்துவிட்டது என்பதை தேசியவீரர்களின் சிந்தை அணு ஒவ்வொன்றும் வெட்கித் தலை குனிகிற அளவுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

★ அவசியமாயிருந்த ஒருவகை பொருளுக்கு பாதுகாப்பிலாக்கா 1951-ம் ஆண்டில் இங்கிலாந்தில் உள்ள ஒரு கம்பெனியிலும், இராணுவ உற்பத்திக் கருவித் தொழிற்சாலைகளின் அதிகாரிகளிடத்திலும் 'ஆர்டர்' கொடுத்திருந்ததாம்.

இதில் தேவையற்ற 'ஆர்டர்' ரத்து செய்யப்படாததால் இந்திய அரசாங்கத்தின் பணம், அதாவது பொது மக்களின் வரிப் பணம்—15·56 லட்சம் பாழாகி யிருக்கிறது.

★ மேலும்; மேற் சொன்ன தேவையற்ற கருவிகளை வாங்கிய பாதுகாப்பு இலாக்காவின் நிபுணர்கள் (!) அவை சரியாக இயங்குகின்றனவா—எனச் சோதனை செய்து பார்த்திருக்கின்றனர். இந்த விதத்தில் பாழான பொதுமக்களின் வரிப்பணம் 1·07 லட்சம் ரூபாய்கள்!

★ தவிரவும், இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்ட பொருள்களில் சில பாதுகாப்பு இலாக்கா விரும்பிய ரகத்தைச் சார்ந்தவை அல்லவாம். ஏனெனில் அந்தப் பொருள்கள் அனைத்தும் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தயாரானவையாம்! இப்போதைய தேவையை நிறைவேற்றும் தன்மை அவைகளுக்குக் கிடையாதாம்!

★ மேலும், இங்குள்ள ஜீப் கார்களின் விற்பனையாளரிடமிருந்து பாதுகாப்பு இலாக்காவைச் சேர்ந்த அதிகாரிகள் பல 'ஜீப்' கார்களுக்கு 'ஆர்டர்' கொடுத்திருக்கின்றனர்!

இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானபோது அந்த பட்டியலுக்கு உண்டான விற்பனை வரியை இருதரப்பில் யார் தருவது என்பது குறிப்பிட்டு எழுதப்படவில்லை!

ஆனால் உண்மையில் அரசாங்கத்திற்கு வரியைச் செலுத்த வேண்டியது 'ஜீப்' கார்களை விற்பனை செய்த வியாபாரிதானும்! வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி சாமான்களை வாங்கிய அரசாங்கம் வரிதரவேண்டிய தில்லையாம்.

இந்த சட்ட நுட்பம் தெரிந்துகொள்ளாமல் பாதுகாப்பு இலாக்காவினர் சம்மந்தப்பட்ட அந்த வியாபாரிக்கு விற்பனை வரியை அள்ளிக் கொடுத்திருக்கின்றனர்.

அதன் மூலம் பொதுமக்கள் வரிப்பணம் எவ்வளவு விரயமாகியிருக்கிறது, தெரியுமா?

10 லட்சம் ரூபாய்கள்!

★ மேலும் ஒரு சமயம் பாதுகாப்பு இலாக்காவிற்குத் தளவாடங்கள் சில தேவைப்பட்டதாம். அவைகளுக்கு 'ஆர்டர்' கொடுக்கும் போது ஒரே சமயத்தில் இங்கிலாந்தில் உள்ள ஒரு கம்பெனியிலும், இந்தியத தளவாட உற்பத்தி அதிகாரியிடத்திலும் கொடுத்திருக்கின்றனர். அதாவது ஒரே பொருளுக்கு, ஏககாலத்தில் இரு வேறு பிரிவினருக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது!

இதனால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு தெரியுமா? 15·08 லட்சம் ரூபாய்கள்!

நிர்வாகத் துறையிலே இவ்வளவு ஒழுங்கீனத்தை வைத்துக் கொண்டுதான் வெட்கமில்லாமல் சொல்லுகிறார்கள்; காங்கிரஸ் கட்சியினரைத் தவிர வேறு யார் பதவிக்கு வந்தாலும் ஒழுங்குற ஆட்சி செய்ய முடியாதென்று!

ஒவ்வொரு நாளும் பத்திரிகையைத் திறந்து படிக்குந்தோறும் பார்க்கின்றோம், இந்திய அரசாங்கமே ஊழல் மயமாயிருப்பதை!

ஒவ்வொரு இலாக்காவும் பணத்துக்கு மதிப்பு வைக்காத கற்கால மனிதனைப்போல வரித்தொகையை கண்ணை மூடிக்கொண்டு வாரியிறைக்கின்றது!

இதைத் தவிர்த்து; அரசாங்கம் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் திட்டங்களைக் கவனித்தால்கூட, ஊழலையும், சுரண்டலையும் இந் நாட்டில் வளர்ப்பதற்குத்தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டிருக்கின்றனரோ—என்று எண்ணத்தக்க வகையிலே அநீதிப் போக்குகள் அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு அணைக்கட்டுத் திட்டங்களும் ஒரு சில லட்சங்களை விழுங்கிய பிறகுதான் நிறைவேறுவதாய் இருக்கின்றன.

நிர்வாகப் படகில் இவ்வளவு ஓட்டைகளை வைத்துக்கொண்டுதான் சென்ற கிழமை நிதியமைச்சர் நம்மை நோக்கிச் சவால் விட்டார்:

இந்த தி. மு. க. வினரால் ஒரு ஐந்தாண்டுத் திட்டம் தீட்டிவிட முடியுமா?—என்று!

பழுதுபட்ட வீட்டைக் கட்டிவிட்டு, இதைப்போல வேறுயாரும் செய்யமுடியுமா?—என்று கேட்கிறார்.

அய்யா, அமைச்சரே! எதிர்க் கட்சியினரை நோக்கி சவால் விடுவதற்கு முன்னர், இதுபோன்ற ஊழல் என்னும் அழுக்கு உருண்டைகளைத் துடைத்தெறியக் கற்றுக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு வேண்டுமானால் சவால் விட்டுப் பாருங்கள்; அதில் சிறிது அர்த்தமிருக்கலாம்!

இப்போது நீங்கள் நடத்திவரும் ஊழலும், சுரண்டலும் நிறைந்த 5-ஆண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தென்னகத்தின் மாபெரும் அரசியல் கட்சியாம் திராவிட முன்னேற்றக் கழகம் தேவையில்லை; உதவாக்கரைகளே அதைச் செய்து முடித்து விடுவர்!

—இதுபோன்ற பதிலைத்தான் வானத்தைக் கீறி வழிகாட்டுவதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரியும், கூரைமீதேறி குருவி பிடிக்கத் தெரியாத இந்தக் குருடர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறோம்!

❋ 10–ம் பக்கத் தொடர்ச்சி

வளர்ச்சியடையாத — சொல்லப்போனுல் பருவமடையாத தேசிய இனங்களும் தனி நாடாக இயங்கும் சக்தி பெருதவைகளாகக் கருதப்படுகின்றனர்!

அவ்வாருனல் ஒரு தேசிய இனம் தனி நாடு பெறத் தகுதி பெற்றுவிட்டது என்று சொல்லத்தக்க வளர்ச்சிகள், அந்த வளர்ச்சியின் அடையாளங்கள் —என்னென்ன?

பேராசிரியர் ஹாக்கிங் ஒரு தேசிய இனம் தனி நாடாக இயங்குவதற்கு முன் — அது கீழ்க் கண்ட அம்சங்களைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று குறிப்பிடுகிருர்:

1. அது வளங்களை ஆளுவதற்கு ஏற்ற சக்தியுடையதாகவும், இயற்கைச் செல்வத்தையும் மூலதனத்தையும் பெருக்கிக் கொள்ளும் வன்மை பெற்றதாயும் இருக்க வேண்டும்.

2. அது நல்ல சட்டங்களை இயற்ற வேண்டும். நடுவுநிலைமையுள்ள நீதி பரிபாலனம் பெற்றிருக்காத வரையில் ஒரு தேசிய இனத்துக்கு தனித்து அரசாங்கமாக வாழும் உரிமை கிடையவே கிடையாது. அப்படி பரிபாலனம் செய்யும் போது நீதிக்காக வேண்டி அடுத்த நாட்டு நீதி மன்றத்தை நாடக் கூடிய நிலைமை ஏற்பட கூடாது.

3. அது தனக்கு உகந்த ஒரு நல்ல அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

4. அது வாணிபம் செய்வது; கடன் அடைப்பது; பிரயாணம் செய்வது— போன்றவைகளை அனுமதிப்பது தனது கடமை என்று கருத வேண்டும்.

5. அகில உலக விவகாரங்களில்; தூதுவர்களை வரவேற்பதில்; ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதில் தனக்குள்ள பங்கினை உணர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அது தன் சார்பாக பெருமையுடனும், பொறுப்புடனும் அகில உலக விவகாரங்களில் கலந்து கொள்ளக்கூடிய ஆண்களையும்; பெண்களையும் அனுப்பி வைக்கின்ற அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

6 அது வெளி நாடுகளின் தாக்குதலினின்று தன்னை தற்காத்துக்கொள்ளும் சக்திபெற்றதாய் இருக்க வேண்டும்.

—இந்த ஆறும் தான் ஒரு தேசிய இனம் தனிநாடாக இயங்குதற்குத் தேவையான வளர்ச்சியின் பூரணத்துவமாகும்.

இந்த குண விசேடங்களை இப்போது ரஷ்யாவிற்குப் பொறுத்திப் பார்ப்போம்.

பின்லாந்தும், போலந்தும் மேலே குறிப்பிட்ட 'ஆறை'யும் —தனித்துவாழும் தகுதியையும் பெற்றிருந்தன. இதர தேசிய இனப் பிராந்தியங்கள் அப்படி அல்ல.

ஸ்டாலின் கூறுவதைப் படியுங்கள் :

"அவைகள் (இதர தேசிய இனப் பகுதிகள்) மத்திய ரஷ்யாவின் இராணுவ, பொருளாதார உதவியின்றி தங்களது சுதந்தரத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையில் இல்லை; அது போலவே மத்திய ரஷ்யாவும் அந்த எல்லைப் பிராந்தியங்களுடைய உதவியின்றி தன்னுடைய இராணுவ, பொருளாதார சக்தியைப் பாதுகாத்துக்கொள்ளும் தன்மையைப் பெற்றிருக்கவில்லை."

எனவே எல்லைப் பிராந்தியங்கள் என்று சுட்டிக்காட்டப்படும் அந்த இதர தேசிய இனப் பகுதிகளின் உதவியின்றி மத்திய ரஷ்யா வாழ முடியாது; அது போலவே மத்திய ரஷ்யாவின் உதவியின்றி இதர தேசிய இனப் பகுதிகளும் வாழ முடியாது; அந்த அளவுக்கு அவை வளர்ச்சி பெறவில்லை.

ஆனல் நாம் கோரும் திராவிடத்தைப் பொறுத்தவரையில் நிலைமை அப்படி அல்ல.

பேராசிரியர் ஹாக்கிங் கூறுகிற இலட்சணங்கள் அனைத்தையும் நாம் பெற்றிருக்கிறோம்.

1. வளமிருக்கிறது; வளத்தை ஆளும் வன்மையிருக்கிறது.

2. நாம் உயர் நீதி மன்றம் தேடி வேறு நாடு செல்ல வேண்டிய தேவையில்லை.

3. அராஜகம் தாண்டவமிடாத அளவுக்கு நல்ல அரசாங்கம் நடத்தும் சக்தியிருக்கிறது.

4. ஒரு சாரார்தான் வாணிபம் நடத்தலாம்; வேரெருவர் நடத்தக்கூடாது — என்பதை போன்ற அநாகரிகமான; மனித உரிமைகளைப் பறிக்கக்கூடிய சட்டங்களை இயற்ற மாட்டோம்.

5. திராவிடத்தில் அகில உலகத் தொடர்பு கொள்ளும் தலைவர்கள்—ஏ. ஆர். முதலியார் போன்றவர்கள் அநேகமுண்டு!

6. யுத்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வலிவும் இருக்கிறது.

திராவிட தேசிய இனம் பூரண வளர்ச்சி பெற்றுவிட்டது; தனித்து வாழ்வதற்கேற்ற பருவம் அடைந்து விட்டது என்பதைக் காட்ட வேறென்ன வேண்டும்?

சிறு நாடுகள்—தனித்து வாழ முடியாது!

சிறு நாடுகள்—நித்திய கண்டம் பூரண ஆயுசு!

—இவையெல்லாம் எழுதிப் படிப்பதற்கு மட்டுமே உதவும் ஏட்டுச் சுரைக்காய்கள்! இன எழுச்சிப் புயலின் முன்னே நிற்க முடியாத காகிதக் கோட்டைகள்! அதுமட்டுமல்ல;

சிறு நாடுகள் வாழ முடியும்.

ரஷ்யாவிலே 'ஸ்தான்'கள் பிரிந்த பிறகுதான் ஐக்கியம் ஏற்பட்டது.

—பஞ்சாயத்தாரே! பஞ்சாயத்தாரே!! வரலாற்றுப் புத்தகத்தைப் புரட்டியாவது இந்த உண்மைகளைத் தெரிந்துகொள்ளுங்கள்! அதன் பிறகாவது இந்திய உபகண்டத்திலும் 'ஸ்தான்'கள் பிரிய வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்து பாருங்கள்! அப்போதுதான் தான் உங்கள் ஏகபாரதப் பித்தம் தெளிவதற்கு மார்க்கம் கிடைக்கும்!

—மாறன், எம். ஏ.

[சென்னை பத்திரிகை யொன்று நடத்திய 'திராவிடஸ்தான் வேண்டுமா; வேண்டாமா?'—என்ற போட்டியில், இதுவரை 'வேண்டாமெ'ன்று எழுதிய பரிசுக் கட்டுரைகளுக்குப் பதில்தரப்பட்டது. இந்த இதழில், போட்டியின் வேண்டாமென்ற பகுதிக்குப் பஞ்சாயத்தாராயிருந்த ஒருவர் எழுதிய கட்டுரைக்கான பதிலின் ஒரு பகுதி தரப்பட்டிருக்கிறது.]

அப்பாவும் மகனும்!

மகன் : முரசொலிப் பதிப்பகம் யாருடையது அப்பா ?

அப்பா : மு. கருணநிதியுடையது.

மக : அவர் தி. மு. கழகத்தில் கொள்கை வழுவாத அரும் பெரும் தலைவர்களில் ஒருவர், இல்லையா அப்பா ?

அப் : ஆமாம்.

மக : முரசொலிப் பதிப்பகத்திலிருந்து பாரதிப் பாடல் தொகுப்பு வெளி வந்திருக்கிறதாமே ?

அப் : ஆமாம்.

மக : அப்படியானல் பார்ப்பனரென்று சொல்லி பாரதி தினம் கொண்டாடாமல், அவர் புத்தகம் மட்டும் வெளியிடலாமா அப்பா ?

அப் : அதுவா ? 'பிஸினஸ்' மகனே !

—இப்படி ஒரு கேள்வி—பதில் பகுதி சென்ற 15—9—56 'ஜனசக்தி' இதழில் வெளியாகி யிருக்கிறது.

முரசொலிப் பதிப்பகம் நம்முடையதாம்! மு. கருணநிதியுடைய அந்த முரசொலிப் பதிப்பகத்திலிருந்து பாரதியார் கவிதை புத்தக வடிவில் வந்திருக்கிறதாம்!

—இப்படி ஒரு அபாண்டமான பச்சைப் பொய்யை உருவாக்கியாவது தி. மு. க. வின் மீது துவேஷக் கணையைப் பூட்ட முயன்றிருக்கிறது அந்த ஏடு!

கம்ப ராமாயணத்திலே கம்யூனிஸக் கருத்துக்கள் புகுந்து கொண்டிருக்கின்றனவா ?—எனத் துருவித் துருவிப் பார்க்கும் தோழர் ஜீவானந்தத்திற்கு முரசொலிப் பதிப்பக மென்று பிராட்வேயிலிருக்கும் வேரெருரு நண்பரின் ஸ்தாபனத்திற்கும், ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள மு. கருணநிதியின் முரசொலிப் பத்திரிகைக்கும் வேறுபாடு தெரியாமற் போனதுதான் நமக்கு வியப்பாக இருக்கிறது!

பாவம்; எது உண்மை என்று தெரியாத ஒரு 'முட்டாள் அப்பாவை'யும் அவருடைய பேச்சுக்குத் தலையசைக்கும் ஒரு 'அசட்டு மகனை'யும் சிருஷ்டி செய்திருக்கும் அந்த ஏட்டிற்கு நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகட்டும்!

பொழுதுபோக்கு

'டெமாஸ்தனிஸ்'

“ இந்திய நாட்டு மக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். கண்ணியமும் நேர்மையும் வாய்ந்தவர்கள் ஒரு வகை; மற்றொரு வகை காங்கிரஸ் காரர்கள்!”—கூறியவர் முன்னாள் நிதிமந்திரி டாக்டர் ஜான் மத்தாய். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு, பொறுப்பான பதவியில் இருந்த பொழுதுதான், கண்ணியமில்லாத வகையினராக காங்கிரஸ் காரர்களைப் பிரித்து, வேறு படுத்திக் காட்டினார்.

அதே மத்தாய்தான், உதகமண்டலத்தில் லாலி இன்ஸ்டிடியூட்டில் அவருக்கும், அவருடைய மனைவியாருக்கும் அளித்த வரவேற்பிற்குப் பதிலளித்துப் பேசுகையில், “நேருவின் வசீகர சக்தியும் புகழும் தான் பாரதத்தை ஒரே நாடாகப் பிணைத்து வைத்திருக்கிறது. பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குப் பின், இப்பொழுதுள்ள தலைமை மறையும் பொழுது இந்திய ஒற்றுமை நிலைக்குமா என்பதைப் பற்றி அக்கறை உள்ள ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்” என்று கூறியிருக்கிறார்.

இந்த வரிகளை—அவருடைய பேச்சை—தோழர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இந்திய ஐக்கியத்துக்குநேருவின்புகழும், வசீகரமும் காரணமே தவிர, இந்தியா ஒரே நாடு என்பதற்கு வேறு காரணங்கள் இல்லை. ஆகவே இம்மாதிரி நிலையில், பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் இந்தத் தலைமை மறையும் பொழுது இந்திய ஐக்கியம் நிலைக்காது என்பதும் மத்தாயின் எண்ணம்.

நம்முடைய அரசியலைக் 'கத்துக்குட்டி'களின் அரசியல் என்று கூறிய, கூறுகிற 'அரசியல் பெரியார்கள்' ஜான் மத்தாய்க்கு என்ன பட்டம் சூட்டப் போகிறார்களோ, யார் கண்டது.

* * *

அதே பேச்சில், எதிர்க் கட்சிகள் — பலம் வாய்ந்த எதிர்க் கட்சிகள் — சட்ட சபையில் இயங்க வேண்டியதன் அவசியத்தை டாக்டர் மத்தாய் வலியுறுத்தியிருக்கிறார்.

ஜனநாயக அரசியல் ஒழுங்காக நடக்க வேண்டுமானால் குறைந்தது திட்டவட்டமான கொள்கைகளின்மீது அமைந்த இரண்டு கட்சிகள் தேவை. இதுதான் ஜனநாயக முறை அமுலிலுள்ள நாடுகளில் காணப்படும் நிலையுங் கூட. ஆனால், சுதந்தரப் போராட்ட காலத்தில் பலவகையான கொள்கை யுடையோரையும் தன்னிடத்தே கொண்ட ஸ்தாபனமாக விளங்கிய காங்கிரஸ், நாடு வெள்ளையனிடமிருந்து விடுபட்டவுடன் காந்தியடிகள் கூறியபடி, ஒன்று கலைக்கப் பட்டு, பொருளியல் — சமூக அடிப்படையில் கட்சிகள் அமைய வழிகோலியிருக்க வேண்டும். அல்லது தன்னை ஒரு கட்சியாகப் பிரகடனப் படுத்திக் கொண்டு, நாட்டுப் பற்றுக்குப் பரம்பரைச் சொந்தம் கொண்டாடாமல், ஆளுகின்ற பெரிய கட்சி என்ற முறையில் எதிர்க் கட்சிகள் வளர, நிலைக்க—ஆளும் கட்சி ஆட்டம் கொடுக்கும் பொழுது ஆட்சியை ஏற்று நடத்த—துணை போக வேண்டும். இந்த அரசியல் நாணயம் ஆளும் கட்சியாகிய காங்கிரசுக்கு இல்லாத காரணத்தால்தான், ஜான் மத்தாய் போன்றவர்கள்—அரசியல் உணர்ந்தவர்கள்—தேர்தல் காலத்தில் இவைகளை மக்களுக்கு நினைவு படுத்தும் கடமையை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

ஆனால் நம்முடைய ராஜ்ய சர்க்காரும், டில்லி ஏகாதிபத்தியமும், எதிர்க் கட்சிகளை வளர்க்கும் — வளர விடும்— முறையே அலாதி! கண்ணீர்ப் புகை, தோட்டா, துப்பாக்கி, 144, பறிமுதல், ஜாமீன், தடுப்புக் காவல் சட்டம்... இத்யாதி இத்யாதி!

* * *

பாகிஸ்தானில் அவாமி லீக் கட்சித் தலைவர் சுஹரவர்த்தி மந்திரி சபை அமைத்திருக்கிறார். சுஹரவர்த்தி இங்கிலாந்தில் முறையாக அரசியல் கல்வி பயின்றவர். பாகிஸ்தானில் நேர்மையான ஆட்சி நிலவ வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர். ஏகாதிபத்தியத்துக்கு முன்னோடும் பிள்ளையாக இருக்க ஆசைப்படாதவர். அவருடைய ஆட்சியை நீடிக்க விட்டால், நீண்டநாள் அரசியல் குழப்பத்துக்கு பாகிஸ்தான் ஒரு முடிவுகாண வாய்ப்புண்டு. தவிர, இந்து—முஸ்லீம் கலவரம் உச்ச நிலையை அடைந்திருந்தபோது காந்தியடிகளோடு ஊர் ஊராக சுற்றி அமைதியை நிலைநாட்டிய பெருமை சுஹரவர்த்தியையும் சாரும்.

பாகிஸ்தானில் நீடித்த அரசியல் குழப்பங்கள் இருக்கக் காரணமென்ன? பாகிஸ்தானை சிருஷ்டி செய்ய, ஜின்னா அவர்கள் தலைமையில் போராடிய முஸ்லிம் லீக் கட்சியில், நிர்வாகப் பொறுப்பை வைத்துக் கொண்டிருந்த அனைவரும் நவாபுகளும், நவாப் சாபாக்களுமே! எல்லோரும் பெரும் பணமூட்டைகள்! ஆகவே, பாகிஸ்தான் உருவாகி நிர்வாகம் லீகினுடைய கைக்கு வந்தவுடன், இந்தப் பணமூட்டைகள் சுயநலத்துக்கு முதலிடம் கொடுத்து, நாட்டின் நலனைப் புறக்கணிக்கலானார்கள். பாகிஸ்தானில் நிலையான அரசாங்கம் ஏற்படுவது கடினமாயிற்று.

திராவிடம் பிரிந்தால் பாகிஸ்தான் நிலைதான் இங்கு ஏற்படும் என்று நம்மைப் பயமுறுத்துகிறவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். இம்மாதிரி பணம் படைத்தோரின் ஆதிக்கத்தால் லட்சியச் சீர்குலைவு ஏற்பட்டு விடும் என்பதை அரசியல் முன்னோக்குடன் அறிந்து தான் அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிடநாடு' பிரிவினைத் தீர்மானத்தைப் பயிர் செய்யும் பொழுதே ஜரிகைக் குல்லாய்கள் என்ற களைகளையும் களைந்தெறியும் பணியை சேலம் மாநாட்டில் சிறப்புறச் செய்தார்கள்.

பாகிஸ்தான் பின்னால் காட்டவிருக்கும் படிப்பினையை முன் கூட்டியே உணர்ந்து, நமது தாயகம் அமைகின்ற போது, அது சுரண்டுவோரின்—சுக போகிகளின் இருப்பிடமாகிவிடாமல் தடுக்க, அண்ணா அவர்கள் செய்து கொடுத்திருக்கும் சாதனை, ஒரு பெரும் அரசியல் அறிஞரின் தலைமையின் கீழ் நாம் பணியாற்றுகிறோம்என்று பூரிப்பு கொள்ளச் செய்கிறது.

உண்மை விளக்க முறத் தெரியும்போது, புழுங்கிச் சாவோரின் பொல்லாங்குப் பேச்சு நம்மை என்ன செய்யும்? அண்ணாவின் சொற்படி எதிரிகளின் ஏசல் நமது கழனிக்கு எருவுமாகும்.

* * *

தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமல்ல; தமிழ் எழுத்துலகிலும் இது அண்ணாவின் சகாப்தம்!

தாங்கள் பெரிய இலக்கிய மேதைகள் போலவும், தங்கள் பத்திரிகைகளை இலக்கியக் கருவூலங்களாகவும் சிலர் எண்ணிக் கொண்டு, நம்மைப் பார்த்து, “இவர்களுக்கு என்ன தெரியும்? எதுகையும், மோனையும், உவமையும் அடுக்குத் தொடரும் தெரியுமே தவிர வேறென்ன தெரியும்? எங்கள் பத்திரிகைகளைப் பாருங்கள்—ஒரே கருத்து மயம், இலக்கியச் சுவை,” என்றெல்லாம் கூறியவர்கள். இப்பொழுது என்ன செய்கிறார்கள் தெரியுமா தோழர்களே? கீழே படியுங்கள்:

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றியது தமிழினம். உலகத்திலுள்ள ஏனைய மக்கள் கற்கால நாகரிகத்தில் இருந்தபோதே பொற்கால நாகரிகத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அறிவுக்கும் ஆற்றலுக்கும் எக்காலத்திலும் தமிழனிடம் பஞ்சமே ஏற்பட்டதில்லை. கலை, இலக்கியம்; வாணிபம்: தொழில் ஆகிய துறைகளில் தன்னிகரற்று விளங்கினான் தமிழன்... கலைத் துறையில் நம்முடைய குன்றாத முயற்சியையும், பகீரதப் பிரயத்தனங்களையும் எடுத்துக் காட்டுவதே மலையைக் கலையாக்கும் மாமல்லபுரச் சிற்பங்கள்......”

9—9—56 'ஆனந்த விகடன்' இதழில் 'தமிழ் நாட்டின் வருங் காலம்' என்று தீட்டப் பட்டுள்ள தலையங்கத்தில் காணப்படும் சில வரிகள்தான் நான் மேலே குறிப்பிட்டுள்ளவை.

இவர்களுடைய நடையில் திடீரென்று இப்படி எதுகையும் மோனையும் எக்காளமிடுவானேன்? 'எண்ணச் செறிவு

✻ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தேர்தல் சூழ்நிலை ஆய்வுக் குழு

தேர்தல் சூழ்நிலையை ஆராய்ந்தறிய திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில், பொதுச் செயலாளர் அவர்களால் அண்ணா அவர்களைத் தலைவராகவும், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட தேர்தல் சூழ்நிலை ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, மேலும் இரு உறுப்பினர்களை அக்குழுவில் சேர்த்துக் கொள்ள அக்குழுத் தலைவருக்கு அதிகாரமும் அளிக்கப்பட்டது.

அதற்கேற்ப, அக்குழுவில் தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகிய இருவரும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்று குழுத் தலைவர் அண்ணா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

'அறிவகம்' சென்னை
16—9—56

தலைமைக் கழகம் (தி. மு. க.)

அறிவிப்பு

சோகத்தால் தவிக்கும் என்னால் இந்த இதழில் எழுத இயலவில்லை.

'உதய சூரியன்' அடுத்த இதழில்! 'தொடர் கதை'யும் அவ்வாறே! மன்னியுங்கள்.

மு. கருணாநிதி

இது வரையில்.....

விடிந்தால் வெள்ளிக் கிழமை! பொழுது விடிந்ததும் தன்னைப் பெண் பார்க்க வருகிற அழகப்பனை கற்பனைக் கண்களால் சுவைத்துக் கொண்டிருக்கிறாள், வேதபுரத்து சிவநேசரின் மகள் சிந்தாமணி. திருக்குளத்தில் நீராடிக்கொண்டிருக்கும்போது அங்கு டைகர் வருகிறான். அவனது விஷமத்தால் அவள் கால் இடறி விழுந்து பிரக்ஞை இழக்கிறாள். உடனடியாக அவளை லேடி டாக்டர் ஆனந்தியின் மருத்துவ மனைக்குக் கொண்டு போகிறார்கள். ஆனந்தி ஊரிலே நல்ல பெயர் எடுத்தவள்தான். ஆனால் பாலகங்காதரத் தேவர் என்பவரின் வலையில் சிக்கி கற்பை இழந்தவள். இப்போது டைகரிடம் ரகசிய நட்பு கொண்டிருக்கிறாள்.

இதற்கிடையில் வேதபுரம் நோக்கி வந்து கொண்டிருந்த மாப்பிள்ளை அழகப்பனும், நண்பன் நயினா முகமதுவும், அன்னை தாயாரம்மாளும் டைகரின் ஆட்களால் தாக்கப்படுகின்றனர். நயினா முகம்மதுவின் தந்திரத்தால் தப்பி, சிவநேசரின் இல்லம் அடைகிறார்கள்.

ஆனால் சிவநேசரும், மனைவி சிவகாமியும் காலை முதல் தொடர்ந்து அபசகுனங்கள் நிகழ்வதாகச் சொல்லி, மருத்துவ மனைக்குச் சென்று பெண்ணைப் பார்க்க வேண்டாமென்று தடுக்கிறார்கள்; அழகப்பனும் நண்பனும் தெரியாமல் மருத்துவ மனைக்குப் போய் விடுகிறார்கள்.

அங்கே டைகரின் சூழ்ச்சித் திட்டத்தால் சிந்தாமணியின் படுக்கையில் அவளுக்குப் பக்கத்தில் சிசு ஒன்று கிடக்கிறது. நர்ஸ் "பிரசவமாகியிருக்கிறது" என்கிறாள்.

அழகப்பன் துடிக்கிறான். சிவநேசரை மனம்போன போக்கில் திட்டிவிட்டு, தாயாருடன் காரில் ஊருக்குப் புறப்பட்டு விடுகிறான். அப்போது காரின் முன்னே "நிறுத்துங்கள்" என்று கத்தியபடியே வந்து விழுகிறாள் ஆனந்தி. சிந்தாமணி களங்கமுள்ளவள் என்று பொல்லாங்கு கூறி, பின் மனசாட்சிக்குப் பயந்து, அவளை மாசிலிருந்து மீட்க வேண்டி வந்தவள்தான் விபத்தில் சிக்குகிறாள். அவளை பாலையூர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்கிறார்கள். அங்கும் வந்து விடுகிறான் டைகர். அவன் உள்ளத்தில் சிந்தாமணி மாசற்றவள்; அவள் பக்கத்தில் கிடந்த சிசு ஒரு சூதுப் பொருள்—என்ற உண்மையை ஆனந்தி வெளியிட்டு விடக்கூடாதே என்ற பயம் சூழ்ந்து விடுகிறது. ஆகவே சாதுர்யமாகப் பேசுகிறான். அழகுவும், நயினா முகம்மதுவும், ஆனந்தியின் தாயஉள்ளத்தைப் புகழ்கிறார்கள். இருவருமே ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொள்ளாமல் ஆனந்தியிடம் மனதைப் பறி கொடுக்கிறார்கள்.

முடிவில் அழகப்பன் தன் தாயாருடன் பெங்களூர் புறப்படுகிறான். பாலையூரிலேயே தங்குகிறான் நயினா.

இதற்கிடையே சிந்தாமணி 'வழுக்கி விழுந்தாள்' என்ற பேரிடியைத் தாங்க முடியாது தவிக்கின்றனர், சிவநேசரும், சிவகாமியும்.

வேதபுரம் மருத்துவ மனைக்கு போகிறார்கள். அங்கே சிந்தாமணியைக் காணோம். சிவகாமி கதறிப் புலம்ப சிவநேசர் புத்தி பேதலித்து, தெருவிலே ஓடுகிறார். ஊரார் கூடி அவரை வீட்டிலே அடைக்கின்றனர்.

அன்று இரவு டைகர் சிவநேசரின் வீட்டுக்கு வருகிறான். சிந்தாமணியைத் தானே தேடிப் பிடித்து அழைத்து வந்தால், அவளைத் தனக்கே மணம் முடித்து வைக்க வேண்டுமென்றும் நிபந்தனை விதிக்கிறான்.

தத்தளித்துக் கொண்டிருந்த அந்தத் தாயிடம் 'என் மகள் உனக்கே' என்று சத்தியமும் வாங்கிச் செல்கிறான்.

நேரே மருத்துவமனைசென்று, பூட்டி வைக்கப்பட்டிருக்கும் சிந்தாமணியை வீட்டுக்கு அனுப்ப முடிவு செய்து வண்டி ஏற்பாடு செய்கிறான். அவள் வண்டியில் ஏறி உட்காருவதற்கு எதிர்பாராத விதமாக உதவி புரிகிறான். அப்போது அங்கு ஓடிவரும் சிவநேசர் டைகரின் பிடியில் சிந்தாமணி இருப்பதைக் கண்டு, இன்னும் பித்தம் அதிகமாகி உளறுகிறார். கணவரைத் தேடி ஓடிவரும் சிவகாமியும் சிந்தாமணியும் சந்தித்துக் கொள்கிறார்கள். டைகர் மூவரையும் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறான்.

பாலையூர் மருத்துவமனையில் பலகணிப் பக்கம் கைத் துப்பாக்கியுடன் ஓர் உருவம் காத்திருப்பதையும் கவனியாது, ஆனந்தியின் நித்திரை அழகை ரசித்துக் கொண்டிருக்கிறான் நயினா முகம்மது......அப்போது அங்கே வந்த நர்ஸ், மருந்துச் சீசாவை மேசையின்மேல் வைத்துவிட்டுப் போகிறாள். ஆனால் அந்த மர்மமான கரிய உருவமோ மருந்து சீசாவில் விஷத்தைக் கலந்து விடுகிறது... அதைக் கவனியாத நயினா, ஆனந்தி விழித்ததும், ஆர்வமுடன் மருந்தைக் கொடுக்கப் போகிறான். அதை விஷம் என்று கண்ட ஆனந்தி, நயினாவின் மேல் சந்தேகம் கொள்கிறாள். ஆனால் விஷம் இருந்த சிமிழைப் பார்த்தபோது, அது வேதபுரத்தில் தனது மருத்துவ மனையில் இருந்தது—என்பதை உணருகிறாள். நயினாவின்மேல் தவறாக சந்தேகித்ததாகக் கூறுகிறாள்; அப்போது திடீரென்று துப்பாக்கி வேட்டு சப்தம் எழும்புகிறது!

நயினா முகம்மது வெளியே ஓடுகிறான். அங்கே டைகர், மருத்துவமனைக் காவலாளியைச் சுட்டுவிட்டான் என்று தெரிகிறது. டைகர் போலீசாரால் கைது செய்யப்பட்டு போலீஸ் வண்டியில் கொண்டு செல்லப்படுகிறான். நயினா, ஆனந்தியிடம் நடந்த விஷயங்களைக் கூறுகிறான். ஆனந்தி நயினாவிடம் டைகரின் தீய செயல்களை விளக்கி, சிந்தாமணி களங்கமில்லாதவள் என்று நம்பும்படிச் செய்கிறாள். நயினாவும், அழகப்பன்—சிந்தாமணி திருமணத்தை எப்படியும் முடித்து விடுவதாகக் கூறுகிறான். பிறகு, ஆனந்தியின் மீது தனக்குள்ள காதலை வெளியிட நேரிடுகிறது. ஆனந்தி தான் டைகரின் வைப்பாட்டி என்கிறாள்.

தாயாரின் வாயிலாக சேதி அறிந்த சிந்தாமணி, ஆனந்தியைக் கண்டு விபரீதத்திற்கு விளக்கம்பெற பாலையூரை நோக்கி ஓடுகிறாள், அந்த இரவில். அப்போது கைதியாக போலீஸ் வானில் செல்லும் டைகர், அவளைக் கண்டதும் கீழே குதித்து துரத்துகிறான். தப்ப விரும்பிய சிந்தாமணி இறுதியில் பெங்களூர் போகும் புகை வண்டியில் ஏறுகிறாள். கார் பழுதாகிவிட்ட காரணத்தால் அழகப்பனும், அவன் தாயும் முதல் வகுப்பில் பிரயாணம் செய்யும் அதே வண்டியில், டைகரும் கடைசிப் பெட்டியில் தொத்திக் கொள்கிறான்.

ஆனால் கள்ளத்தனமாக அபின் கடத்தும் ஒருத்தி, போலீசாரிடம் சிக்கிக் கொள்ளும் தருவாயில், பழியை தந்திரமாக சிந்தாமணியின் மேல் சுமத்துகிறாள். அது கண்ட டைகர் செய்வதறியாது நிற்கும்போது, ரயிலிலிருந்து இறங்கிச் செல்லும் அழகப்பனைத் தொடர்ந்து சென்று, அவனது

❊ தொடர்ச்சி 12-ம் பக்கம்

தென்பாண்டிக் கடல் முத்தே! தீர்ந்ததோ உந்தன் வாழ்வு!

ஐய்யய்யோ!...இன்றைய பொழுது இப்படியா விடிய வேண்டும்......இந்தப் படுகொலைச் சேதி கேட்கத்தானா பகலவனுக்கு முன்பு படுக்கை விட்டெழுந்தேன்! போய் விட்டானாமே போர் வீரன்!... தூத்துக்குடி தங்கம் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாமே! சிங்கத்தின் உருவம் சிதைக்கப்பட்டு விட்டதாமே!......அம்மவோ, என்னருமை நண்பன் சாமியைக் கொன்று போட்டு விட்டானாமே கொடியவன்! நாடுகாக்கும் நல்லதம்பிகளில் ஒருவன் நரிக்குணம் படைத்த நாசகாலனின் வெறிக்குஆளாகி விட்டான்! எப்படித் தாங்குவோம் இந்த இடியனைய செய்தியை!

சமருக்கஞ்சா வீரனே—எப்படியடா சாய்ந்தது உந்தன் திருமேனி! கனிவும் கனலும் ஒருங்கே கிளம்பும் அந்த ஒளியுமிழ் திருவிழிகள் எப்படியடா மூடிவிட்டன! "அண்ணாச்சி வாங்க" என்று அன்பொழுக அழைக்கும் அந்தப் புன்னகைக்குப் பெயர்பெற்ற வாய் மூடி விட்டதா?—இனிக் கேட்க முடியாதா அந்த இன்ப உபசாரத்தை?...குடும்பத்து அண்ணன் தம்பிகளை-அக்காள் தங்கைகளை-நமது மூத்த அண்ணாவை—எல்லோரையும் கலங்கித் தவிக்கச் செய்து விட்டு துயில் நீங்காத் தொட்டிலிலே படுத்து விட்டாயே தூத்துக்குடி கண்மணியே!...

எதை நினைத்து நாங்கள் ஆறுதல் பெறுவது—எதை நினைத்தாலும் எரிமலைக் குழம்பாய் மாறுகிறதே நெஞ்சம்!... இரண்டு வாரத்துக்கு முன்புதானே அறிவகத்தில் சந்தித்து அளவளாவினோம்......தேர்தலுக்கு நிதி திரட்டத் திட்டமெல்லாம் சொன்னாயே!...'நம் நாடு' இதழை அளவிலே பெரிதாக்க வேண்டுமென்று துடித்தாயே!...'"அப்படியே செய்வோம் சாமி" என்று அண்ணா அறிவித்தவுடன் அகமகிழ்ந்து குதித்தாயே—அதை நினைத்துக் கலங்குவதா? திருநெல்வேலிச் சீமைக்கு சுற்றுப் பயணம் தாருங்கள் என்று கேட்டுப் பெற்றவுடன் பெருமகிழ்ச்சி கொண்டாயே; அதை நினைத்துக் குமுறுவதா?......என்ன நினைப்பது-எதைப் பேசுவது-எதை எழுதுவது-திண்டாடுகிறேன்! திகைக்கிறேன்!—தேம்பி யழுகிறோம்—திரவியப் பேழை சூறை போய்விட்டது என்று கூவுகிறோம்—கொந்தளிக்கிறோம்!...கொள்கை வீரா! நீ உலவிய தூத்துக்குடியில்

> திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழ உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் சங்கம் உள்ளிட்ட பல தொழிற் சங்கங்களின் தலைவரும், அண்ணாவின் அருமைத் தம்பிமார்களில் ஒருவரும், இயக்கத்தின் நீண்ட நாளைய உழைப்பாளருமான அருமைத் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள், **20—9—56** அன்று இரவு சுமார் **9-30** மணியளவில் தூத்துக்குடியில், தமது இல்லத்தை நோக்கிச் சைக்கிளில் நண்பர் ஒருவருடன் சென்று கொண்டிருக்கையில், குண்டன் ஒருவனால் படுகொலை செய்யப்பட்டார்!

கொடியவனும் ஒரு குண்டனும் உலவினனா? அவனுக்கு உந்தன் குருதி தேவைப்பட்டதா?...... இருபதுக்கும் முப்பதுக்கும் இடையிலே உள்ள இளம் சரீரத்தின் சதையைத் தின்று ஏப்பமிட நினைத்தானா அந்தக் காட்டுமிராண்டி?

எதைச் செய்தாலும் கொள்கைக் கென்றே செய்வாய்! எதைப் பேசினாலும் இலட்சிய வெற்றிக்கே பேசுவாய்!...

அன்றொருநாள் ஈரிரு திங்களுக்கு முன்னர் தூத்துக்குடி கடற்கரையிலே எம்மை உலாவிட அழைத்துச் சென்று, உப்பளங்களைக் காட்டி, "அங்கு உழைக்கும் தோழர்களுக்கு நான்தான் அண்ணாச்சி; தலைவன்" என்று கம்பீரத்தோடு கூறினாயே; இப்போது என் காதிலே முழங்குகிறதடா செல்வமே; அந்த வார்த்தை!

தூத்துக்குடி புகைவண்டி நிலையத்தில் வந்திறங்கினால்... நெடிய உருவம் — நிமிர்ந்த நோக்கும் நெஞ்சுறுதியுங் கொண்ட காளை—நீயொருவன் வணங்கி வரவேற்பாயே; வில்லவன் கோதை போல!...இனி வெறிச்சோடிக் கிடக்குமே அந்த இடம்!...

பெருமை மிகு மாநாடொன்றை நடத்திக் காட்டிப் பெரியாரிடம் பாராட்டு பெற்றவனே!.....அண்ணாவின் அருமைத் தம்பியே! சாவுக்கு அஞ்சாத எந்தன் சகோதரா!......இனியொரு முறை இன்முகங் காட்டும் உன்னைக் காணப்போகிறோமா? இல்லை! இல்லை! இழிமகன் அதற்குள் உன் உயிரைப் பறித்து விட்டான்.

கழகத்தின் செயற் குழுவிலே உறுப்பினன்—

நெல்லை மாவட்டத்தின் செயலாளன்—

உப்புத் தொழிற் சங்கத் தலைவன்—

நகராண்மைக் கழகத்தின் உறுப்பினன்—

பள்ளிக்கு நிர்வாகி —

இத்தனை பொறுப்புகளையும் ஓய்வின்றித் தாங்குகிறாய் என வருந்தி ஓய்வளித்து விட்டானோ ஒழுக்கமிலா ஓதியமிலார்! இதயத்தில் அழுக்கு மிகும் அற்பன்!...முகமூடி அணிந்து வந்தானாமே; எங்கள் முழு நிலவை அழிப்பதற்கு!...

"என்ன தவம் செய்தேனோ இப்படியொரு வீர மகனை அடைவதற்கு!" என்று இது நாள் வரை மகிழ்ந்திருந்த உன் மாதா—சவமான உன்னைக் கண்டு, "என்ன பாவம் செய்தேனோ இக்கொடுமை காண்பதற்கு!" என ஒப்பாரி வைத்து ஓலமிடுங் காட்சி என் கண்ணைக் குத்திக் காதையும் குடைகிறதடா கண்ணே!—கடமை தவறா மணியே! கழகத்தின் உணர்ச்சிக் கனியே!... காலம் உன்னைக் கொய்யாமல் விட்டுவிடும் எனப் பயந்தோ கயவன் கொத்திவிட்டான் உந்தன் உயிரை!...

ஆயிரமாயிரம் பேர் உன் ஆணை கேட்க நெல்லை மாவட்டத்தில் உண்டு! அணி அணியாய் அவரெல்லாம் கூடிநின்று நாடு மீட்கும் படை நடத்தும் வழி கேட்க வாயின்றி, உன் சவக் காட்சி காணுகின்றார்! கொடுமை! கொடுமை!!

மாவட்டத் தளபதியே! மாவீரா! மறத்தமிழர் குலவிளக்கே! பாசறைக் காவியமே! பழந்தமிழ் ஓவியமே! அண்ணாவின் அறப்படையின் உயர் வீரா!...அயராத திண்தோளா!...திராவிடத்தின் பெருஞ் சொத்தே! தென்பாண்டிக் கடல் முத்தே! தீர்ந்ததா உந்தன் வாழ்வு?...அவலம்! அவலம்!!

களம்புகு வீரர் தம் உளம் புகுந்த உத்தமனே! நடக்காமல் நீண்டு விட்ட உந்தன் கால்களிலே எந்தன் கண்ணீரைக் கொட்டுதலின்றி வழியறியேன்......வகையறியேன்!...... வேறு செயலறியேன்!......

வாழ்க உந்தன் புகழ்க் கோட்டை!......வணங்குகின்றேன் நீ வீழ்ந்த திக்கு நோக்கி! தென்னிலங்கைப் பெருவேந்தன் பரம்பரையே...தலையுடைக்கப் புறப்பட்ட வீரர்களின் தலையுடைக்க வருபவர்கள் இன்னும் வரட்டும்! உடல் அளித்து—உயிர் கொடுத்து—உரிமைக்கு முழங்குவதே தொழிலாய்க் கொள்வோம்! தூத்துக்குடி பெரியவரின் தொண்டு போற்றுவோம்!...

வேறென்ன இருக்கிறது வேதனையைத் தீர்க்கும் மார்க்கம்?......

வாழ்க சாமி!....
வாழ்க வாழ்கவே!!

---மு. கருணாநிதி.

பாசறை வீரனின் பொதுப் பணிகள்!

- சுயமரியாதை இயக்கத்தில் முக்கியத் தொண்டராயிருந்து பணியாற்றியிருக்கிறார்.
- திராவிட கழகத்தில் 1948-ம் ஆண்டுவரை முக்கியப் பதவிகள் ஏற்றுத் தொண்டாற்றியிருக்கிறார்.
- 1947-ம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிட கழக மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராயிருந்து அரும் பணியாற்றியிருக்கிறார்.
- திராவிட முன்னேற்றக் கழகத்தில் தற்போது நெல்லை மாவட்டச் செயலாளராகவும், மத்திய செயற்குழு உறுப்பினராகவும் இருந்து சிறந்த பணியில் ஈடுபட்டு வந்தார்.
- 1953-ம் ஆண்டு ஜூலை திங்களில் நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தின்போது, தூத்துக்குடி இரயில் நிறுத்தக் கிளர்ச்சியின்போது சதிவழக்கு குற்றம் சாட்டப்பட்டு, நீண்ட நாட்களாகக் காவலில் வைக்கப்பட்டிருந்து பின்னர் அவ்வழக்கில் வெற்றிபெற்றார்.
- அண்மையில் நடந்த தூத்துக்குடி நகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்று நற்பணியாற்றி வந்துள்ளார்.
- தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் சங்கம் உள்ளிட்ட பல தோழிற் சங்கங்களுக்குத் தலைவராயிருந்து வந்தார்.

பஞ்சாயத்தாரே! பஞ்சாயத்தாரே!

❊ 2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டில் இது சர்வ தேச சங்கத்திலும் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டது!

லக்ஸம்பர்க் மட்டுமா சிறிய நாடு? அதைவிடப் 'பொடிசு'களும் இன்று சுதந்திரத்துடன் வாழ்கின்றன.

அண்டோரா—ஒரு நகரம்; தனி நாடாக வாழ்கிறது, ஸ்பானிஷ்—பிரெஞ்சு எல்லையில்! பரப்பளவு 191 சதுர மைல். மக்கட் தொகையோ 6,000 தான்! 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்பதற்காக இது தன் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கவில்லை!

மொனாகோ—மத்திய தரைக் கடல் ஓரத்திலுள்ள நாடு! பரப்பளவு 4 மைல். மக்கட் தொகை சுமார் 2,000!

ஸான் மரினோ—இன்றைய உலகிலுள்ள மிகப் பழைய குடியரசு இது! பரப்பு 38 சதுர மைல். மக்கட் தொகை 15,500.

—இவையெல்லாம் 'பெரிய நாடுகளுக்குத்தான் மதிப்புண்டு' என நினைத்துக் கொண்டு தங்கள் தன்மதிப்பை இழந்து விடவில்லை!

தன்மானம்; வீண் கௌரவம்—இவைகளில் மானத்திற்குத்தான் முதலிடம் தர வேண்டுமென்கிறோம், நாம்!

அது கூடாது; வீண் கௌரவம்தான் பெரிது என்கிறார்கள் திராவிடஸ்தான் வேண்டாமென்று கூப்பாடு போடுபவர்கள்!

அதனால்தான் சொல்லுகிறோம்; மானத்தைக் காப்பாற்ற நினைக்கும் திராவிடரே, எங்கள் பக்கம் சேர்ந்திடுவீர்—என்று!

அடுத்து இந்த பஞ்சாயத்தார்களில் ஒருவர் ரஷ்யாவை உதாரணத்துக்கு அழைத்திருக்கிறார்.

'ரஷ்யா பெரிய நாடாக இருப்பதால்தான் சிறந்த வல்லரசாகத் திகழ்கிறது'—இப்படிக் கூறுகிறார் இவர்!

அதாவது பெரிய நாடுகள்தான் வல்லரசாகத் திகழ முடியுமாம், இவரது கூற்றுப்படி!

பிரிட்டன் ஒரு வல்லரசுதான்: ஆனால் அது பெரியநாடு அல்லவே!

சுமார் 94 ஆயிரம் சதுர மைல்கள்தானே அதன் பரப்பளவு!

மக்கட் தொகையும் அங்கே கோடிக் கணக்கில் இல்லையே! சுமார் 5 லட்சம் பேர்தான் பிரிட்டனில் வசிக்கின்றனர்!

அளவில் பெரியதல்ல; மக்கட் தொகையில் பெரியதல்ல; இருந்தும் பிரிட்டன் ஒரு வல்லரசாகத் திகழ்கிறது!

பிரிட்டனை விடப் பல மடங்கு பரப்பளவில் பெரியது ஆஸ்திரேலியா! அது ஒரு நாடல்ல; ஒரு கண்டம்! ஏறத்தாழ அமெரிக்காவின் பரப்பளவு கொண்டது! இருந்தும் ஆஸ்திரேலியாவால் ஏன் ஒரு வல்லரசாகத் திகழ முடியவில்லை? ஏன்?

பஞ்சாயத்தாரே; பஞ்சாயத்தாரே! ஒரு நாடு பெரிதாயிருப்பதற்கும், அது வல்லரசு ஸ்தானத்தைப் பெறுவதற்கும் அதிகத் தொடர்பிருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பீர்களேயானால் அதை இப்போதாவது மாற்றிக் கொள்வீர். இல்லையேல் சரித்திரம் படித்தவர்கள்; கடந்த கால அரசியல் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருப்பவர்கள்; ஆகியோரின் கேலி மொழி உங்கள் மீது கணையெனப் பாயும்—என்பதைத்தான் இப்போது சொல்லிக்காட்ட ஆசைப்படுகிறோம்!

அடுத்து 'பஞ்சாயத்தார்' கூறுவதைக் கவனிப்போம்!

"ரஷ்யாவிலும் பல ஸ்தான்கள் பிரிய மார்க்கம் உண்டு. ஆயினும் ரஷ்யர்கள் ஒன்று பட்டு நிற்கிறார்கள். மாறாகத் தனித் தனி ஸ்தான்களாகப் பிரிந்திருந்தால் இத்தனை நாளும் ஜெர்மனியர்களுக்கு அடிமையாகப் போயிருப்பார்கள்,"

—என்று கூறி ரஷ்யாவிலே பல 'ஸ்தான்'கள் பிரியாத போது, இங்கு மட்டும் ஏன் ஒரு 'திராவிடஸ்தான்' பிரிய வேண்டும்—என்று மறைமுகமாகக் கேள்வியை அனுப்புகிறார்.

இங்குதான் நாம் 'திராவிடஸ்தான் எதிரி'களுக்கு சற்று விளக்கம் உரைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

சோவியத் நாட்டிலே பல தேசிய இனங்கள் அடங்கியிருக்கின்றன. அவை யெல்லாம் தனித்து வாழ நினைக்காத போது இங்குள்ள திராவிட தேசிய இனத்தவர் மட்டும் ஏன் தனித்து வாழ நினைக்க வேண்டும்?—இது கேள்வியின் மாற்று உருவம்.

அங்கு ஒவ்வொரு தேசிய இனங்களுக்கும் தரப்பட்டிருக்கிற அதிக பட்ச உரிமைகள்; உள்நாட்டு விவகாரங்களில் தரப்பட்டிருக்கும் சுயாட்சி; மத்திய அரசாங்கத்தின் கெடுபிடி இன்மை— போன்ற பலவற்றை நாம் சோவியத் நாட்டிலே பல 'ஸ்தான்'கள் தோன்றாததற்குக் காரணங்களாகச் சுட்டிக் காட்டலாம்.

இருந்தும் அங்கிருந்து பல 'ஸ்தான்'கள் பிரிந்து சென்றிருக்கின்றன–என்பதை 'பஞ்சாயத்தார்' தெரிந்து கொள்ளாமலிருந்து விட்டார்—என்பதைத்தான் வருத்தத்தோடு சுட்டிக் காட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஜார் ஆட்சியை ஒழித்த பிறகு, பலமான சோவியத் யூனியனை அமைக்கு முன்பு அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள்.

1917-ம் ஆண்டில் ஸ்டாலின் தன்னுடைய 'தேசியப் பிரச்னையின் ரிப்போர்ட்'டில் "ரஷ்யாவிலே ஒரு அங்கமாக

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சொல்லும் செயலும்!

★

"சர்க்கார் விரும்பியிருந்தால், நெசவாளர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் தானே இயங்கும் தறிகளைத் தென் இந்திய மில்களில் புகுத்தியிருக்கலாம்; ஆனால், நெசவாளர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் எதையும் சர்க்கார் செய்யாது"

என்று, கோவையில் சென்னை முதலமைச்சர் காமராசர் நிருபரிடம் கூறியிருக்கிறார்.

'சு. மி.': 18—9—56

"ஐவுளி மில்களில் தானே இயங்கும் தறிகளை பொருத்திக்கொள்வதற்காக எல்லா ராஜ்யங்களைக் காட்டிலும், சென்னைதான் அதிகத் தறிகள் வேண்டுமென மனுச் செய்துள்ளது."

மாநிலங்கள் மக்கள் சபையில் பண்ட மந்திரி கனுங்கோ சமர்ப்பித்த அறிக்கையொன்றில் இது தெரியவருகிறது.

—'தினமணி'; 14—9—56

பொழுது போக்கு

❊ 5-ம் பக்கத் தொடர்ச்சி

இல்லாதவர்'களுக்கே தோன்றும் எதுகையும் மோனையும் இந்தக் கருத்துச் சுரங்கங்களின் நடையில் ஏன் வந்தது? அதுதான் தோழர்களே 'அண்ணாவின் சகாப்தம்' என்பது. வளர்வோரைப் பார்த்து வசை பாடுவதும், அவர் வசையையும் தாண்டி வளர்ந்து உருவான பின் அவர் வழி நின்று ஒழுகுவதும் இந்நாட்டின் நிலைமட்டுமல்ல, வரலாறு கற்பிக்கும் பாடமே அதுதான்! ஆனந்த விகடன் மட்டுமல்ல, 'சுதேசமித்திரனும்' 'தினமணி'யும்கூட மோனையுடனும் எதுகையுடனும் (பல சமயங்களில் அபத்தமாக) செய்திகளுக்குத் தலைப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

நடையில் மட்டுமல்ல, கருத்தில்கூட நமது அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

"இமயத்தில் புலிக் கொடி பொறித்தோம். காவிரிக்கு அணை கட்டினோம். காஞ்சி, தில்லை, மதுரை போன்ற மாநகர்களை அமைத்தோம்."

திடீரென்று தமிழ்க் காதல் மீதுற 'ஆனந்த விகடன்' இப்படி எழுதுகிறது.

தமிழகத்தில், இப்படித் தமிழப் பற்று வளரக் காரணமாயிருந்தது யார்? அதே தலையங்கத்தில் 'ஆனந்த விகடன்' தீர்ப்பளிக்கிறது.

"பொதுக் கண்ணுடன் பார்த்தால் (அண்ணாதுரை) ஒரு மெச்சத் தகுந்த மனிதர். தொண்டில் பற்றுடையவர். ஒரு புதிய இலக்கிய சமுதாயத்தையே சிருஷ்டி செய்தவர். இன்று தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியரிடையே காணப்படும் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக விளங்குபவர்."

இது அண்ணாவின் சகாப்தம் என்பதை ஆனந்த விகடன் உணர்ந்து, அவ்வழி எழுதினாலொழிய வருங்காலத் தமிழகத்தில் வாழ்வில்லை என்று புரிந்து கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டின் எல்லாப் பத்திரிகைகளுமே. நமது பிரச்சினைகளைப் புரிந்து, ஆராயத் தலைப்பட்டு விட்டன.

"பெருமைக்குரியது, தோழர்களே! அண்ணாவின் சகாப்தத்தில். அவர் படைத்த இலக்கியச் சமுதாயத்தின் சந்ததியாய், அவர் வகுத்துள்ள லட்சியத்தின் தூதுவர்களாய், நாம் விளங்குகிறோம். பிரிவினை வாரத்தில் அதை நினைவுகூற வேண்டியது நம் கடமையல்லவா?

'புறக்கணிப்பு' தரும் போதனை!

சங்க இலக்கியம் தொடர் கதையல்ல; துவண்ட கதை!

கோகலே மண்டபத்தில் மதியழகன்

8—9—56 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் தி. மு. க. தலைமை நிலையத்தின் சார்பில் நடைபெற்ற தேர்தல் நிதி சிறப்புக் கூட்டத்தில் 'இலக்கிய இன்பம்' பற்றி நாவலர் இரா. நெடுஞ்செழியன் பேசினார். தலைமை வகித்த கே. எ. மதியழகனின் தலைமையுரைச் சுருக்கம்.

"சங்க இலக்கியம் உயர்வானதுதான். உன்னதமானது தான். ஆனால் அதற்கு உரிய இடத்தை அடையாமல் போனதற்குக் .காரணம், இலக்கியத்தின் தரக்குறைவல்ல. அதன் காவலர்கள், எவரிடம் சென்று தவழ வேண்டுமோ, அவர்களிடமிருந்து அதை மறைத்து விட்டனர். பெரும்பாலான மக்களிடம் பரவும் வழி வகை மேற்கொள்ளப்படவில்லை. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், பொது மக்கள் புலவர்களால் புறக்கணிக்கப் பட்டனர். புறக்கணிப் பின் விளைவு, சங்க இலக்கியம் உரிய இடத்தைப் பெறாதது மட்டு மல்ல. அதன் மதிப்பு குறைந்த தால் அதன் காவலர்களின் மதிப்பும் குறைந்தது. தமிழ் புலவர்கள், தங்கள் அருமந்த சீடர்கள் சிலருக்கே இலக்கியத்தின் எழிலை எடுத்தியம்பினர். பெரும்பாலரான மக்கள் புறக் கணிக்கப்பட்டார்கள். புறக் கணிக்கப்பட்டோர் வேறு வழி நடக்கலாயினர். புறக்கணிப்பு என்பது தனி வாழ்விலாயினும், அரசியலிலாயினும், இலக்கியத் திலாயினும், மிகவும் ஆபத்தானது. உதாரணத்திற்கு, சொல்லுவேன், ஒரு குடும்பம் உள்ளது. அதிலே ஓர் அண்ணன், ஓர் தம்பி. குடும்பப் பொறுப்பு அண்ணன் கரத்தில் உள்ளது. அந்த குடும்ப நிர்வாகத்தை அண்ணன் மூன்று முறையிலே நடத்தலாம். தம்பியை சமமாக பாவித்து, அன்பு சொரிந்து, அரவணைப் புக் காட்டி. குடும்பத்தின் அமைதியை, சிறப்பைப் பெருக்குவது ஒரு முறை. இந்த முறை தான் பின்பற்ற வேண்டிய சீரிய வழி. வேறு இரண்டு முறைகளும் இருக்கின்றன. தம்பியை அடக்கு முறையால் கொடுமைப் படுத்தி, அவனுக்குள்ள உரிமைகளைப் பறித்து. தம்பியை அண்ணன் காவிலே வாழும் தாசனுக்கும் முறை. இந்த முறையில் அண்ணனால் அடக்கப்பட்டவன், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள புதிய சக்தியைப் பெறுகிறான். அண்ணன் அசகாய சூரன், ஆற்றல் மிகுந்தவன் எனத் தயங்குவ தில்லை.

தனது நிலையை உருவாக்கும் தகுதிக்குத் தன்னைத் தயாரித்துக் கொள்ளுகிறான், இது இரண்டாவது முறை. இந்த இரண்டும் இல்லாமல் மூன்று வது ஒரு முறை உள்ளது. அதன் விளைவுகள் மிக பயங்கர மானது. அண்ணன் அரவணைக்காமலும், அடக்கு முறையை வீசாமலும், தனது உடைமைகளை மட்டும் கவனித்து தம்பியைப் புறக்கணித்து விடலாம். இந்தப் புறக்கணிப்பு நிலை மிகப் பொல்லாதது. அண்ணன் தனது மனைவி, மக்கள், மாடு கன்று, மகன் படிப்பு என்று இருப்பான். தம்பி தறுதலையாகிறானே என்று கவலைப்படாமல் இருந்தால் தம்பிக்கும், அண்ணனுக்கும் உள்ள உறவு முறை முறியும். அன்பு வற்றும். பாசக்கயிறு அறு படும். அண்ணனே நிரந்தரமாக 'அரியாசனத்தில்' இருப்பான் என்றும் சொல்லமுடியாது. அண்ணன் தாழ்வு நிலையை அடையவும், கூடும். தம்பி உயர் நிலையில் அமரவும் கூடும் அந்த நேரத்தில், ஏற்கெனவே ஏற்பட்ட புறக் கணிப்பால், இயற்கையாக சுரக்க வேண்டிய அனுதாபம், ஆறுதல் இருவர் மனதிலும் மலர முடியாது. இருவரும் வேறு வேறாகிவிடுகின்றனர். தனிப்பட்ட குடும்ப வாழ்வில் மட்டுமல்ல. அரசியலிலும், இலக்கியத்திலும், புறக்கணிப்பு நினைவுறுத்தும் போதனை, கவனத்திற்கு உரிய ஒன்று.

அரசியலில் புறக்கணிக்கப் பட்ட இனம், வீறுகொண்டு எழும்போது, புறக்கணித்த, வர்களை, பொருட்படுத்தாததை நிராகரித்ததை வரலாறு பல சம்பவங்களின் மூலம் சாட்சியம் பகருகிறது. ரோம் நாட்டில் பெட்ரீஷியன் என்ற கூட்டம், பிளிபியன் என் போரை, நெடுநாட்கள் புறக் கணித்தனர். பிளிபியன்கள் வீறிட்டு எழுந்து புது நிலை பெற்றபோது பெட்ரீஷியன்கள் நிலைமை பரிதாபத்திற்கு உரியதாக மாறியது. இந்திய உபகண்ட அரசியலில் இஸ்லாமியர் புறக்கணிக்கப்பட்டனர். அவர்கள் எழுச்சி பெற்ற நாட்களில் தாயகம் அமைத்துக் கொண்டதை எவரும் தடுக்க முடியவில்லை.

நமது தமிழின் காவலர்கள் சிலரை நம்பி சேரமிந்தனர். பலரை நம்பும் பக்குவம் பெற வில்லை. பெரும்பாலான மக்களும் தங்கள் அவாக்களுக்குத் தகுந்ததுபோல் வேறு வழி நடக்கலாயினர், பொருளாதாரத்தில் கிரஹாமின் விதி முறை ஒன்று உண்டு. கெட்ட நாணயங்கள் நல்ல நாணயங்களை அப்புறப் படுத்துகின்றன." என்று அதன் பொருள், செலாவணியில், மதிப்புக் குறைவான நாணயங்கள் சுற்றி வருமானால் அதிக, மதிப்புள்ள நாணயங்கள் இரும்புப் பெட்டிக்குள் சென்று பதுங்கி விடும். மதிப்புக் குறைவான நாணயங்கள் தான் மக்கள் மன்றத்தில் உலா வரும். இந்த பொருளாதார விதிமுறை, தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை மறுக்க முடியாத உண்மையாயிற்று. சங்க காலம் என்று தொடங்கிய தமிழ் இலக்கியத் தொடர் கதை. முதல் அத்தியாயத்துடனேயே துவண்ட கதையாகி விட்டது. சமய இலக்கியங்களும். அந்தாதிகளும், தூதுகளும், கலம்பகங்களும், ஸ்தல புராணங்களும்,சங்கஇலக்கியத் தின் இடத்தைப் பிடித்தன. தமிழ்ச் சமுதாயத்திற்கு இடர் சம்பவித்தது.

இந்த நிலையிலிருந்து புது நிலை பெறுவதற்கு தமிழ் இலக்கியம் தாழ்ச்சியுற்ற நிலை விளக்கப்பட்டாக வேண்டும். சங்க இலக்கியம் நல்லது என்றால், இருபதாம் நூற்றாண்டில் வாழ்பவர்களை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அழைத்துச் சென்று, அத்தகு வாழ்வை மீண்டும் நிர்மாணிப்பதற்கல்ல. நிச்சயமாய், சங்க இலக்கிய நாட்களைவிட நாம் முன்னேறியுள்ளோம், அந்த வாழ்வைவிட நமது வாழ்வு தாழ்வானதுஎன்று எந்த கருத்துக்குருடனும் கூறமாட்டான். கல்லறையில் பூஜா மடம் அமைத்து அதனை வலம் வாருங்கள் என்று நாம் கூற வில்லை. அது ராமராஜ்யக் காரர்களுக்கு சரியானதாக இருக்கலாம். நமக்கல்ல. கரிகாலன் காலத்தைவிட காமராஜர் காலம், எல்லாத் துறையிலும் முன்னேற்றத்தின் அறிகுறியை பெற்றுத்தான் உள்ளது—அதை மறுத்துப் பயனில்லை. கரிகாலன் நாட்களில் மகத நாட்டின், அவந்தி நாட்டின், கலிங்க நாட்டின், தோரணவாயில், முத்துப்பந்தர், பட்டி மன்றம் ஆகியவை தான் உண்டு.

காமராஜர் காலத்து "டேப் ரிக்கார்டர்" கிடையாது. காவலன் நெடுஞ்செழியன் ஆண்ட நாட்களைவிட நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் வாழும் நாட்கள் நிச்சயமாய் முன்னேற்ற மடைந்துள்ள காலம். பாண்டிய நாட்டு அரண்மனையில், தளத்திலே இருந்து வரும் சேதியை, குதிரை வீரனின் குதிரை குளம்படிச்சத்தம்தான் புலப்படுத்த வேண்டியிருந் திருக்கும். இன்றோ "டெலிபோனின்" மணி ஓசை தொலை தூரத்திலே பேசுகிறவனின் குரலை நம்முடன் இணைக்கும். பாண்டிய நாட்டு பட்டத்தரசிக்கு இல்லாத வாய்ப்புக்கள் இன்றைய தினம் பஞ்சாயத்துப் போர்டு குமாஸ்தாவின் மகளுக்கு ஏற்பட்டுள்ளது. பாண்டிய நாட்டு அரசிளங்குமரி சினிமா பார்த்ததில்லை, ஆகாய விமானத்தில் பறந்த தில்லை. எனவே பழமையின் வளைவு நெளிவுகளுக்கு மயங்காமல், காலத்திற்கேற்ற இலக்கியம் சமைத்து புது வாழ்வு நிர்மாணிக்கும் பொறுப்பு இந்த தலைமுறையாளர்களாகிய நம் தலை மீது விழுந்துள்ளது. அதனை வெற்றிகரமாக்க வேண்டும்."

"வெள்ளி வீதி"

"மணிமகுடம்" 100-வது நாடக விழா சிறப்பிதழ்!

நாவலர் இரா. நெடுஞ்செழியன், டாக்டர் மு. வரதராசனார், நாரண துரைக்கண்ணண், பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, நடிகமணி டி. வி. நாராயணசாமி, மு. கருணாநிதி—ஆகியோரின் விழாச் சொற்பொழிவுகளுடனும், நாடக விழா புகைப்படங்களுடனும்,

23-6-56 அன்று

விற்பனைக்குக் கிடைக்கும்!

"வெள்ளி வீதி" சென்னை—6.

வளர்ச்சி பெற்றோம்; வாழ்வு பெறுவோம்!

❋ 8-ம் பக்கத் தொடர்ச்சி

சேர்க்கப்பட்டிருக்கிற பிற அமுக்கப்பட்ட நாடுகள் தாங்கள் இனி ரஷ்ய நாட்டோடு சேர்ந்து வாழ நினைக்கின்றனவா; அல்லது சுதந்தரமாக வாழ நினைக்கின்றனவா என்பதைத் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்தந்த நாடுகள் தாங்கள் சுதந்தரமாக வாழ நினைத்தால், அவைகளுக்குத் தனித்து வாழும் உரிமை அளிக்கப்படும்—என்றும் கூறினர்.

ஜார் காலத்து ரஷ்யாவில் பின்லாந்து, போலந்து போன்ற தேசிய இனங்களும் சேர்க்கப்பட்டிருந்தன.

கம்யூனிஸ்ட் கட்சி பிரிந்து போகும் உரிமையை வழங்க முன் வந்தபோது பின்லாந்து, போலந்து, உக்ரேன்—போன்றவை ரஷ்யாவிடமிருந்து விலகி தனித்து வாழ நினைக்கும் பட்டியலில் இடம் பெற்றிருந்தன.

அப்போது (1917 மே மாதம்) லெனின் கீழ்க் கண்டவாறு கூறினர்: "பின்லாந்தும், போலந்தும், உக்ரேனும் ரஷ்யாவிலிருந்து பிரிந்துபோக நினைத்தால் அதில் தவறேதும் இருக்க முடியாது," என்று!

இவைகளுக்குப் பிறகுதான் ஜார் ஏற்படுத்தி வைத்த ரஷ்யாவிலே முதல் 'ஸ்தான்' பிரிந்து சென்றது!

அப்படிப் பிரிந்து சென்று; இப்போதும் சுதந்தரமாக வாழ்கின்ற நாடுகளில் ஒன்றுதான் பின்லாந்து! அதுதான் ரஷ்யாவிலிருந்து பிரிந்து செல்லும் உரிமையை முதன் முதலாகப் பெற்ற 'ஸ்தான்' ஆகும்!

டிரான்ஸ் காகேசியா—என்னும் பகுதியும் பிரிந்து போவதில் தனக்குள்ள நாட்டத்தைத் தெரிவித்தது. இப்பிராந்தியம் ரஷ்யாவைவிட்டு விலகிச் செல்வது ஸ்டாலினுக்குப் பிடிக்கவில்லை, தனிப்பட்ட முறையில்!

ஆனல் கட்சி ரீதியில் பிரச்னை ஆலோசிக்கப்பட்டபோது, ஸ்டாலின் குறிப்பிட்டார்: "...... டிரான்ஸ்காகேசியாவின் மக்கள் பிரிவினையை வற்புறுத்துவார்களேயானல் அவர்கள் பிரிந்து செல்லலாம்; எங்களிடமிருந்து எதிர்ப்பு வருமென்று அவர்கள் எதிர்பார்க்க வேண்டியதில்லை"—என்று!

லெனின் சிறுநாடுகள் தனித்து வாழ்வதில் நம்பிக்கையில்லாதவர்; இருந்தும் அவர் பின்லாந்தும், போலந்தும் தனித்து வாழ நினைத்தால் அதில் தவறேதும் இருக்க முடியாது என்று கூறினர்!

அதன்படியே பின்லாந்து, போலந்து—பிரிந்தன!

'பஞ்சாயத்தார்' ரஷ்யாவின் சரித்திரத்தைப் படிக்க மறந்துவிட்டு கூறியிருக்கிறார், ரஷ்யாவில் 'ஸ்தான்'கள் பிரியவில்லை, என்று!

அன்புள்ள பஞ்சாயத்தாரே! பின்லாந்தும், போலந்தும் என்ன?

'ரஷ்யாவிலி'ருந்து பிரிந்து வந்த ஸ்தான்கள்தான், அவை!

இந்தியாவின் அரசியல் அதிகாரத்தை மேற்கொண்ட தேசியத் தோழர்கள் செய்த மாபெரும் தவறென்றை ரஷ்யாவின் போல்ஷ்விக்குள் செய்யவில்லை.

அவர்கள் பதவிக்கு வரும்போதே தெள்ளத் தெளிய அறிவித்தார்கள்: எம்மோடு சேர்ந்து வாழ்வோர் சேர்ந்திருக்கலாம் பிரிந்து செல்வோர் செல்லலாம்—என்று!

அதன்படியே பின்லாந்தும், போலந்தும் பிரிந்தன! எஞ்சியவை இணைந்து கொண்டன!

ஆகஸ்ட் 15-லே ஆட்சி பீடத்துக்கு வந்த தேசியத் திருவாளர்களும் அப்படித்தான் நம்மைப் பார்த்துக் கேட்டிருக்க வேண்டும்: தென்னகத்தை பூர்வபூமியாகக் கொண்ட திராவிடர்களே! நீங்கள் ஒரு தேசிய இனக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நீங்கள் இப்போது பிரிந்துபோக நினைக்கிறீர்களா? அல்லது வடவர்களாகிய எங்களோடு இணைந்து வாழ நினைக்கிறீர்களா?"—ஸ்டாலின் பின்லாந்து; போலந்து மக்களைப் பார்த்துக் கேட்டதைப்போல அதற்கு மாவீரர் லெனின் தலையசைத்து தனது சம்மதம் தெரிவித்ததைப்போல; இங்கு அந்தக் கேள்வியை பண்டித நேரு கேட்டிருக்கவேண்டும்; 'அது சரி' என்று மகாத்மா காந்தி தலையசைத்திருக்க வேண்டும்!

அப்படிச் செய்யத் தவறினர்கள் அவர்கள்! அதனல்தான் அவதிப்படுகிறர்கள்!

தும்பை விட்டு வாலைப் பிடித்த கதையாக அவர்களாகவே நேர்மையுடன் நம்மைக் கேட்டு திராவிடத்தை கொடுக்க மறந்து; இப்போது நாமே போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திவிட்டு; மூலை முடுக்கிலிருந்தெல்லாம் 'நாமெல்லாம் ஒன்று'—என ஏகபாரதப் பல்லவி பாடுகிறர்கள்!

ரஷ்யாவிலே இரு 'ஸ்தான்'கள் பிரிந்தன; அதைப் போலவேதான் நாமும் மேலே பாகிஸ்தான்; கீழே திராவிடஸ்தான் என இரு'ஸ்தான்'கள் பிரிய வேண்டுமென்கிறேம்!

—பஞ்சாயத்தார் இப்போது நம்மிடம் ஒரு புதிய கேள்வியைக் கேட்கலாம்! "ஏனய்யா; ரஷ்யாவிலிருந்து பின்லாந்து, போலந்து ஆகிய இரண்டும் தானே பிரிந்தன; இதர தேசிய இனங்கள் கூட்டுச் சேர்ந்து ஐக்கியத்துடன்தானே வாழ்கின்றன; அதைப்போல திராவிட தேசிய இனத்தைச் சேர்ந்த நீங்களும் ஏன் இந்திய யூனியனேடு; வட நாட்டுக்காரர்களோடு சேர்ந்து வாழக் கூடாது?" என்று அந்தப் புதிய கேள்வி வடிவம் கொள்ளலாம்!

—இது தேசிய இனப்பிரச்னையைப் பொறுத்த வரையில் மிக மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பகுதியாகும்!

இன்று உலகிலே ஒரே நாட்டில் பல தேசிய இனங்கள் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழ்வதைப் பார்க்கிறேம்!

ஆனல் சில நாடுகளில் அந்த ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்பட்டு, சம்மந்தப்பட்ட தேசிய இனங்கள் பிரிந்து செல்ல எத்தனிப்பதையும் காண்கிறேம்!

உதாரணமாக ரஷ்யாவைத்தான் எடுத்துக்கொள்வோமே; அங்கு பின்லாந்தும், போலந்தும் மட்டும் பிரிந்து செல்ல நினைப்பானேன்? இதர தேசிய இனங்கள் ரஷ்யாவோடு சேர்ந்து வாழ நினைப்பானேன்?

இதுபோன்ற 'இக்கட்டான' கேள்விகளுக்குப் பதில் கூறும் வகையில், பேராசிரியர் ஹாக்கிங் அருமையாகக் கூறியிருக்கிறர்:

சம்பந்தப்பட்ட தேசிய இனம் தனி நாடாக இயங்குவதா கூடாதா என்பது அந்த தேசிய இனத்தின் வளர்ச்சியைப் பொறுத்ததாகும்!—என்று

பெண்கள் குறிப்பிட்ட பருவத்தை அடைந்த பிறகுதான் ஆடவனெருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கத் தகுதியுடையவர்களாகின்றனர்!

தேசிய இனங்களும் அப்படித்தான்! போதிய வளர்ச்சி பெற்ற பிறகுதான்—அவைகள் தனி நாடு பெற்று இயங்கும் தகுதியுடையவைகளாகத் திகழ்கின்றன.

மைனர் பையன்கள் எப்படி சொத்துக்களைப் பாதுகாக்க முடியாதவர்கள் என்று கருதப்படுகிறர்களோ, அப்படித்தான்

❋ 4-ம் பக்கம் பார்க்க

ஓங்குக நன்றே!

(கருணானந்தம்)

கண்ணீர்த் துளியெனும் காரணப் பெயருடன்,
கண்ணியம், கடமை, கட்டுப் பாடெனும்
திண்ணிய கொள்கைத் தெளிவும் பெற்று,
எண்ணிலா இளைஞரின் இதயங் கவர்ந்த
தென்னக மாந்தரின் தேசிய இயக்கம்—
தாயகம் மீட்கும் ஓய்விலாப் பணிக்குத்
தன்னைத் தானே சமர்ப்பித் திருக்கும்
ஒரேயொரு மாபெரும் அரசியல் கட்சி—
பணபலம், படைபலம், பத்திரி கைபலம்
குணமில் லாரிடம் குவிந்து கிடப்பினும்,
மக்களை உயர்த்தும் அக்கரை மிகுதியால்
பலமுனை களிலும் பாசறை அமைத்துப்,
போர்முறை தெரிந்து, புறமுது கிடாமல்
சாவினும், வாழ்வினும் தளரா உறுதியாய்,
நாவின் வலிமையால் நடைபெறும் நிறுவனம்—
வடவர் சுரண்டிடத் தடம்அமைப் பதையே
கடைமையாய்க் கொண்ட காங்கிரஸ் முதலாய்,
உடைமை பொதுவெனத் திடமாய்ச் சொல்லியே
உழைப்பவர் பொருளில் திளைப்பவர் ஈருய்
நாட்டின் நலனில் நாட்டம் கொண்டவர்
ஒருவரும் இலரென உறுதியாய்க் கூறி,
ஆதார மாகஓர் ஆயிரங் காட்டி,
வாழும் வகையையும் வகுத்திடும் கழகம்—
ஏழாண் டாக எழில்நடை போட்டு, இன்று
எட்டாம் ஆண்டினை எட்டிப் பிடித்தது!
கட்டிக் காத்திடுங் காவலர் யாவரும்
கழிபெருங் களிப்புக் கடலில் மூழ்கியே
ஒளிபெற வாழ்த்தினர்; ஓங்குக நன்றே!

அனாதை விடுதி

● 'அனாதைச் சிறுவர்கள் விடுதி' — இந்தக் கொட்டை எழுத்துக்கள் கந்தனின் கண்களில் பட்டது. அனாதையாகத் திரிந்தவனாயிற்றே அவன், அதைக் கண்டதும், மூங்கிலைக் கண்ட முல்லைக் கொடிபோல மகிழ்ந்தான். அடுத்த கணம்— அவன் கால்கள் அந்த விடுதிக்குள் புகுந்தன. எதிரே...

மிடுக்கான ஒருவர் கந்தனைத் தடுத்தார். "என்ன வேணும் தம்பி?" என்றார் அவர். அவருடன் ஒரு சிறுவன் நின்றிருந்தான். அவன்தான் அவருடைய மகன் சேகர்.

"நான் அனாதைங்க"

"உம்.உம்...உன் பேரென்ன? வயது?"

"கந்தனுங்க. வயது பதினலுங்க"

"ஜாதி?"—அவர் கேட்டார். அவன் விழித்தான். "அட, பொல்லாத உலகமே! எங்கு போனாலுமா சாதி! இந்த அனாதை விடுதியிலுமா சாதி?" என எண்ணினான் கந்தன்.

"ஐயா! எனக்கு என் சாதி என்னன்னு தெரியாதுங்க. எங்கப்பாவுக்கு செருப்பு தைக்கிற தொழிலுங்க; அவரு அந்த வேலையை எனக்குக் கத்துக் கொடுக்காமலே செத்துப் போயிட்டாருங்க"—கண்களிலே கண்ணீர் வடியக் கூறினான், கந்தன்.

"அப்போ, நீ சக்கிலியா?"—என்றார் அவர்.

"சக்கிலியோ, சங்கிலியோ எனக்குத் தெரியாதுங்க......" என்றான் கந்தன். அந்த அனாதைச் சிறுவர் விடுதியிலே சேர்த்துக்கொள்ளப்பட்டான். எட்டாம் வகுப்பிலே சேர்ந்த அவன் எதிலும் முதல்வனாக இருந்தான்.

● ஒரு நாள் மாலை...

விளையாட்டு மைதானத்தில் கந்தனின் கோஷ்டி கால்பந்து விளையாடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது......... "கந்தா" என்ற ஒரு குரல் கேட்டுத் திரும்பினான். அவனைக் கூப்பிட்டது வேறு யாருமல்ல; விடுதி அதிகாரியின் மகன்தான்.

"என்ன சேகர்?" என்றான் கந்தன்.

"நானும் உங்களுடன் சேர்ந்து விளையாடலாமா?" என்றான் சேகர்.

'ஓ, அதுக்கென்ன!' என்று சொல்ல வாயெடுத்தவன், "வேண்டாம் சேகர். நாங்களோ தாழ்ந்தவர்கள்—நீ எங்களுடன் சேர்ந்து விளையாடுவதை இங்குள்ள யாவரும் வெறுப்பார்கள்" என்றான்.

"அதெல்லாம் முடியாது. நான் உங்களுடன்தான் விளையாடுவேன். இல்லேன்னா எங்கப்பாவிடம் சொல்லிவிடுவேன்" என்று அழ ஆரம்பித்தான், சிறுவன் சேகர்.

வேறு வழியில்லாமல் சேகரையும் சேர்த்துக் கொண்டு விளையாட ஆரம்பித்தான் கந்தன்.

தங்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சேகர், கந்தனுடன் சேர்ந்து விளையாடுவதைக் கண்ட உயர்தர மாணவர்களுக்கு ஏனோ பொறுமை — அதிலும் வெங்கிட்டு என்ற பையன் கந்தனுக்கு விரோதி. அவன் சும்மா இருக்கவில்லை. இந்த விஷயத்தை சேகரின் அப்பாவின் காதுக்கு எட்டச் செய்தான். அவ்வளவுதான்; அவர் சிம்ம சொரூபமானார். கையிலே பிரம்புடன் காட்சியளித்தார் கந்தன் எதிரே. அவனுடைய தலையை அவர் இடதுகை பிடிக்க, வலதுகையிலிருந்த பிரம்பு கந்தனின் முதுகிலே 'சுரீர்...சுரீர்' என்று விளாசிவிட்டு ஓய்ந்தது. அதைத் தொடர்ந்து "ஐயோ, அப்பா!" என்ற ஆதரவற்ற கந்தனின் குரல் அலறியது.

"அனாதையா வந்தானேன்னு ஆதரவு தந்தா அளவுக்கு மிஞ்சியா போயிட்டே, ராஸ்கல்! என் மகன், உன்னுடன் சேர்ந்து விளையாடுவதா?" என்று கத்தினார் அவர்.

"அவனே தானுங்க விளையாட...வ...வந்தான்"—கந்தன் தடுமாறினான்.

"அவனே வந்தா, என்ன நீ எப்படியடா சேத்துக்கலாம்? இடியெட்! இனிமே இப்படியெல்லாம் நடந்தே தோலை உறிச்சுடுவேன், ஆமா"—அதிகாரி அதிகாரமாகப் பேசினார்.

● மாலை மறைந்தது. இரவு வந்தது.

"கந்தா என்னாலல்லவா நீ உதை பட்டாய்?"

"சேகர், நேசத் தென்றல் நீ—பாசப் பொதிகை! உன் தந்தையோ எரிமலை!"

"கந்தா, உன்னுடனேயே பேசிக் கொண்டிருக்கலாம் — இங்கேயே படுத்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது"

"சேகர், அதோ ஊர்க்கோடியிலே தெரிகிறதே சேரி, அங்கே பார்! தாழ்ந்த குடிசைகள் தான்—ஒளி தரும் நிலவு; சில்லென் வீசும் தென்றல் காற்று; அமைதியான இடம்; அதைக் கலைக்க பூச்சிகளின் ரீங்காரம்; இதெல்லாம் அங்கே இயற்கை! ஆனால், இதோ பக்கத்திலே பார் உயர்ந்த மாளிகைதான்— உள்ளே பாதரச விளக்கு நிலவுக்குப் போட்டி போடுகிறது; மின்சார விசிறி தென்றலுக்கு சவால் விடுகிறது; அமைதியைக் கிழிக்க, பாடும் ரேடியோ பக்கத்திலே — இவை முழுதும் செயற்கை! மனிதன் செயற்கையை விட இயற்கையை விரும்புவதி ஆச்சரியம் இல்லையே? சேகர், உன் சூழ்நிலை அப்படி; என் சூழ்நிலை இப்படி. என்ன செய்வது?"

பேச்சு வளர்ந்தது. கந்தனுக்கோ பயம். வற்புறுத்தி சேகரை அனுப்பிவிட்டு கண்களை மூடினான்.

● நாட்கள் நகர்ந்தன. வாரங்கள் வளர்ந்தன. மாதங்கள் மறைந்தன. அன்றுதான் தீபாவளிப் பண்டிகை. இனயெழுச்சி வீரனை சூழ்ச்சிக்காரர்கள் கொன்ற நாள்— அந்த நாளில்தான் ஊரெங்கும் கொண்டாட்டம். அகல் விளக்குகள் வீதியை அலங்கரித்தன. விடுதியிலேயும் அந்தப் பண்டிகை இருக்கத்தான் செய்தது. மாடம்—கூடம் எல்லாம் விளக்கு மயம்! ஆனால். விடுதியின் கூரை உச்சியில் ஒரு விளக்கு இல்லாததால் களையிழந்து கிடந்ததாம். அதிகாரியின் உத்திரவின்படி கந்தன் ஒரு பெரிய அகல் விளக்கை எடுத்துக் கொண்டு விடுதிக் கூரைக்கு ஏணி போட்டு ஏறினான். ஏணியில் ஒரு காலும் கூரையில் ஒரு காலும் ஊன்றிக் கொண்டு விளக்கை எரிய வைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது...

சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வெங்கிட்டுவுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. அவன் யோசிக்கவில்லை. காரியத்தை முடித்துவிட்டான்.

டமார் — என்று ஏணி கவிழ்ந்தது — "ஐயோ...... அம்மா!"—கந்தன்தான் அலறினான்.

கந்தன் வீழ்ந்தான். சத்தம் கேட்டு சூழ்ந்து கொண்டார்கள் பிள்ளைகள். "யார், கந்தனா?" என்றவாறு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தார் அதிகாரி — சேகரின் அப்பா! கந்தனின் கால்களிலிருந்து ரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. ஆம்; வலது கால் முறிந்துவிட்டது. கந்தனை யார் தள்ளியது என்று அதிகாரிக்கு நன்றாகத் தெரியும். வெங்கிட்டுவை முறைத்துப் பார்த்தார். அவன் உடல் பனிக்கட்டியாகிவிட்டது. நடுங்கியவாறே நின்றிருந்தான். கந்தன் மருத்துவ மனைக்கு எடுத்துச் சொல்லப்பட்டான். கந்தனின் வலது கால் வெங்கிட்டுவின் சூழ்ச்சிக்கு வெட்டுண்டது.

● பல நாட்கள் பறந்தோடின.

தன் வீட்டு வாசலிலே யாரோ நிற்பதைப் பார்த்து ஓடிவந்தான் சேகர். எதிரே கலங்கிய கண்ணீர் கிழிந்த ஆடையை நனைக்க, ஊன்றுகோலை ஊன்றிக் கொண்டு நின்று கொண்டிருந்தான் கந்தன். "சேகர், இந்தக் கடிதத்தை அப்பாவிடம் கொடுத்துடு" என்றான். இருவரும் ஒருவரை ஒருவர் கலங்கிய கண்களுடன் பார்த்துக்கொண்டே நின்றனர். வாய்மூடி, கண்கள் பேச நின்ற சேகர், அப்பா தன்னைக் கூப்பிடுவதைக் கேட்டு உள்ளே ஓடினான்.

"அப்பா, அப்பா. நம்ம கந்தன் இல்லேப்பா கந்தன், இந்தக் கடிதத்தைக் கொடுத்திட்டுப் போயிட்டான் அப்பா"— என்றவாறு கடிதத்தைக் கொடுத்தான் சேகர்.

"அப்படியா?" — என்று அதைவாங்கிப் படித்தார்:

"அன்புடையீர்!

உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி—என்று இலக்கணம் வகுத்துக் கொண்டு நடந்தீர்களே, உண்மையை உணர்ந்தீர்களா? உயர் சாதிக்காரன் செய்த இழி செயலைப் பார்த்தீர்களா? உயர்ந்த எண்ணம் உள்ளவன் தான் உயர்ந்தவன்! சாதிகள் இல்லை; அது 'சதி!' என்பதை இப்பொழுதாகிலும் புரிந்துக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

என்னை ஆதரித்தவரே, நீங்கள் அன்று உங்கள் கைப் பிரம்பால் என்னை அடித்தபோது ஏற்பட்ட வடு என் உடம்பை விட்டு மறைந்தாலும் என் நெஞ்சைவிட்டு அது இன்னும் மறையவில்லை. நான் வாங்கிய உதைக்கு நான் அழவில்லை; உங்கள் மகன் சேகர் தான் அழுதான். அவனுடைய பிஞ்சு உள்ளத்திலே 'சாதி' என்னும் நஞ்சைத் தூவி விடாதீர்கள். அவன், அவனுடைய பாதையிலே நடக்கட்டும்; கெடுத்து விடாதீர்கள். இது தான் என் வேண்டுகோள்.

—அன்பு மறவாத கந்தன்."

படித்து முடித்தார். பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டார். வெளியே வந்து பார்த்தார். அப்பொழுது தான் கந்தன் ஊன்றுகோலை ஊன்றி, நொண்டிக் கொண்டு தெரு முனையைக்கடந்துகொண்டிருந்தான்.

அதற்குப் பிறகு...

விடுதி வாசலிலே 'கந்தன் அனாதைச் சிறுவர்கள் விடுதி!' என்ற புதுப் பலகை மாட்டப்பட்டது. அன்று முதல் எல்லாச் சிறுவர்களுக்கும் உடையிலே — உணவிலே — படுக்கையிலே வித்தியாசமே இல்லை!

●

'சுகம்தேடி'; கல்லிடை.

(?) வானிலே தோன்றும் வில்லுக்கும், நேருவின் நாவிலே தோன்றும் சொல்லுக்கும் என்ன வித்தியாசம்?

வானவில்லை விட நேருவின் சொல் வர்ண ஜாலங்கள் நிரம்பியது; ஆனால் அதைவிட சீக்கிரம் அழலாகாமல் மறைந்தே விடும் தன்மை கொண்டது.

(?) வானத்தில் கருடனைக் கண்டதும் நம் நாட்டு மக்கள் கன்னத்தில் அடித்துக் கொள்கிறார்களே: அது ஏன்?

ஆகாய விமானத்தைப் பார்த்துக் கன்னத்தில் அடித்துக் கொண்டால் மனித சக்திக்கு மதிப்பு வைத்ததாக ஆகி விடுமே; அதனால்தான்.

கே. சுதர்சனம்; சென்னை.

(?) நேருவுக்கும் நாசருக்கும் என்ன வித்யாசம்?

நேரு வாய் வீச்சாளர்; நாசர் செயலாளர்!

எஸ். கே. முத்துசிவன்; காரை.

(?) மொழி வழியாக மாநிலங்கள் பிரிந்துவிட்ட பிறகும் உங்கள் திராவிட நாட்டுக் கோரிக்கை உயிருடன் இருக்கிறதா?

குழந்தைகள் பிறப்பதால் தாயார்கள் இறந்து விடுவதில்லை தோழரே!

பி. திருநாவுக்கரசு; தஞ்சை.

(?) நமது பிரச்னையைப் புரிந்து கொண்டும் நட்டு வைத்த கம்பம்போல் நின்றுகொண்டிருப்பவர்கள் எப்போது திருந்துவார்கள்?

பூகம்பம் ஏற்படும்போதுதான் அந்தக் கம்பங்கள் சாயும்!

கணக்காளரும், மிஷின்மேனும் தேவை!

கணக்கெழுதும் திறனும், பத்திரிகை அலுவலக முன் அனுபவமும் கொண்ட கணக்காளரும், அச்சகப் பகுதிக்கு அனுபவமுள்ள மிஷின்மேன் ஒருவரும் தேவை! நேரில் விண்ணப்பிக்கவும்.

—நிர்வாகி.

எஸ். குமரப்பன்; திருநெல்வேலி.

(?) வீரர்கள் எப்போது பயப்படுவர்?

விழிகள் வேலாக மாறும்போது!

ஜீவா; சென்னை.

(?) தி. மு. கழகம் பாரதியைப் பற்றி என்ன கருதுகிறது? அவர் பார்ப்பனர் என்பதற்காக புறக்கணிக்கும் நோக்கம் உண்டா?

அப்படி யொன்றும் கிடையாது. பாரதியின் கவிதா மேன்மைக்கு நாங்கள் என்றுமே மதிப்புக் கொடுக்கத் தயங்கியதில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே 'மக்கள் கவி' என்ற தலைப்பில் உங்களைவிட மிக அழகாகப் புகழ் மாலை சூட்டியதை அதற்குள்ளாகவா மறந்து விட்டீர்!

கே. ஆர். சி. வேலன்; ஈரோடு.

(?) பெரியாருக்கு எல்லோரும் பிறந்த தினப் பரிசு கொடுக்கும் போது, இரட்டைக்குழல் துப்பாக்கி என்று கூறிக் கொள்ளும் தி. மு. க. மட்டும் ஏன் ஒன்றும் கொடுக்கவில்லை?

தி. மு. க. தன் தலைவருக்குப் பரிசு கொடுக்கும் நேரம் இதுவல்ல; திராவிட நாட்டுப் பிரிவினை தினத்தன்று விடுதலைச் சாசனத்தை அவரிடம் அளிப்பது தான் இலட்சியத்தில் குறி வைத்திருக்கும் மகன் தந்தைக்களிக்கும் தகுதிமிக்க பரிசாக இருக்கும் நண்பரே!

எல். சுந்தரவதனம்; ஆழ்வார்பேட்டை.

(?) மந்திரிகள் பேசும்போதெல்லாம் தாங்கள் மக்கள் நன்மைக்காகவே பாடுபடுவதாகப் பேசுகிறார்களே: அதன் பொருள் என்ன?

அவர்களுக்கும் மனைவி மக்கள் இல்லையா, என்ன? அவர்கள் நன்மைக்காகப் பாடுபடுவதைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறார்களோ, என்னவோ!

சௌந்தரராசன்; மேலூர்.

(?) திராவிடம் பிரிந்து விட்டால் ஏதோ வடநாட்டில் பஞ்சம் வந்து விடுவதைப் போல கலங்குகிறார்களே ஏன்?

உண்மைதான்; திராவிடம் பிரிந்தால் வடநாட்டுப் பணிமனைகளில் நிச்சயம் 'ஆள் பஞ்சம்' ஏற்பட்டு விடும்; நண்பரே!

விற்பனையாளர்களுக்கு!

முத்தாரம்

★ 25-ம் தேதிக்குள் பட்டியல் தொகை முழுவதையும் அனுப்பி வைத்தால்தான் அக்டோபர் இதழ் கிடைக்கும்.

★ அதிகப் பிரதிகள் வேண்டுவோர் தேவையான முன்பணம் அனுப்பினாலன்றி கூடுதல் இதழ்கள் அனுப்பப்பட மாட்டாது!

வெள்ளிக்கிழமை

✻ 6-ம் பக்கத் தொடர்ச்சி

வீட்டு முகவரியைத் தெரிந்து கொள்ளுகிறான்.

ஒரு வாரம் சென்றபின் அழகப்பனிடம் டைகர் வந்து, ஆனந்தி இறந்து விட்டதாகவும், நயினா வீட்டிலிருந்த நகை நட்டுகளோடு ஓடி விட்டதாகவும் புளுகி, ஆயிரம் ரூபாய் பணம் பெற்றுப் போகிறான். அவன் போனதும் அழகுக்கு ஒரு கடிதம் வருகிறது.

"ஆனந்தி நலமடைந்து வேதபுரத்திற்கு வந்து விட்டாள்" என்று நயினா எழுதியிருக்கிறான்.

டைகர் தன்னை ஏமாற்றி விட்டதைப் போலீசுக்குத் தகவல் கொடுத்து விட்டு, ஆனந்தியை சந்திப்பதற்காக அழகப்பன் வேதபுரம் வருகிறான். அங்கே ஆனந்தியின் அன்பு உபசரணைகளைத் தவறாகக் கருதிக் கொண்டு, அவளிடம் தனது காதலை செயல் மூலம் வெளிப் படுத்துகிறான். அப்போது வெளியிற் சென்றிருந்த நயினா முகம்மது திரும்பி வந்து அழகப்பன் செயலைக் கண்டும் காணாதவன் போல் இருந்து விடுகிறான். ஆனந்திக்கோ ஒரே குழப்பம்.

சிந்தாமணிக்கு மூன்று மாத கடுங்காவல் என்ற செய்தியை நயினா படித்துக் காட்டுகிறான். அப்போது சிவநேசர் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தியுடன் வேம்பு வருகிறான்.

சிறையிலே இருந்த சிந்தாமணியை திடீரென்று பால கங்காதரத் தேவர் ஜாமீனில் விடுதலை செய்கிறார்.

தந்தை இறந்த சேதி கேட்ட சிந்தாமணி தாயாரைக் காணத் துடிக்கிறாள். தேவர் பெங்களூரில் உள்ள வேலைகளைப் பார்த்துவிட்டு, பிறகு வேதபுரம் வருவதாகவும், சிந்தாமணியும் தாயாரைச் சந்தித்து விட்டு பெங்களூர் புறப்படத் தயாராக இருக்க வேண்டுமென்றும் கூறுகிறார். அவளும் சம்மதித்து வேதபுரம் வருகிறாள். வேதபுரத்தில் இருளடைந்த வீட்டில் தாயின் பிணம் தொங்குகிறது.

தாயின் தற்கொலை கண்ட சிந்தாமணி, தன் குடும்பத்தின் சீரழிவுக்கே ஆனந்தியும் டைகருந்தான் காரணம் எனக்குமுறி எழுந்து, ஆனந்தியைப் பழி தீர்த்துக் கொள்ளப் புறப்படுகிறாள். அப்போது ஆனந்தி மருத்துவ விடுதியில், நயினா ஆனந்தியை சோதிப்பதற்காக அழகப்பன் படுத்திருக்கும் அறையில் போய் படுத்துக் கொள்கிறான். ஆனந்தி நயினா எதிர்பார்த்தபடி வராமல், நயினா அறையென எண்ணி அழகப்பன் கட்டிலண்டை போகிறாள். அப்போது அழகப்பன் அவளிடம் தன் எண்ணத்தை வலியுறுத்துகிறான். இதை வெளியே இருந்து நயினா முகம்மது கவனிக்கிறான். இவர்கள் யாருக்கும் தெரியாமல் அங்கே ஒரு மூலையில் சிந்தாமணியும் ஒளிந்திருக்கிறாள், வேறிடத்தில்!

அழகப்பனின் பிடியில் சிக்கிய ஆனந்தி, தான் நயினா முகம்மதுவைக் காதலிப்பதாகச் சொல்லுகிறாள். அது கேட்டு, தனக்கே துரோகம் இழைத்து விட்டான் நயினா என்று கருதிய அழகு, அப்போது அறைக்குள் நுழையும் நயினாவைத் தாக்குகிறான். எதிர்த்துத் தாக்காது, அமைதியாக இருந்த நயினா ரத்தக் காயங்களுடன் வெளியேறுகிறான். ஆனந்தி மயக்கமுற்று கட்டிலில் சாய்கிறாள்.

மறைந்திருந்த சிந்தாமணி, அறையில் ஆனந்தி இருக்கிறாள் என்கிற காரணத்தால், பக்கத்திலிருந்த அம்மிக் குழவி ஒன்றை எடுத்துக் கொண்டு ஆனந்தியின் அறையை நோக்கி நடக்கிறாள். 'பழிக்குப் பழி' வாங்க விரும்பிய அவளது குமுறும் நெஞ்சம், ஆனந்தியின் தலையில் அக் குழவியை வீசிக் கொல்ல முடிவு செய்து விட்டது.

அதே சமயம், தாக்கப்பட்ட நயினா காயங்களுக்கு மருந்திட்டுக் கொண்டு மீண்டும் அழகப்பன் இருந்த அறைக்குச் சென்று, தான் நண்பனுக்காக ஆனந்தியைத் தியாகம் செய்து விடுவதாகக் கூறுகிறான். நட்பிலே தொய்வு ஏற்பட்டதற்காக வருந்திய அழகப்பன், நயினாவின் காலைப் பிடித்துக் கொள்கிறான்...

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.